


| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௮, ஐப்பசி | பரல் |
|---|---|---|
| ௩௨ | நவம்பர், 1957 | ௩ |

# செந்நாப் புலவர் மறைவு

செந்தமிழ்க் கடலிற் படிந்து, மொழிநீரை முகந்து, வழு உவர் களைந்து, அயல்மொழிப் புலவர் அகம் நடுங்க இடித்துப், புகழ்மின் னொளிவீசித், தமிழகப் புலம் தழைக்க, அறிவுப் பயிர் வளரச், சொல்மாரி கவிமாரி பொழிந்து, பார் எங்கும் படர்ந்து, சீர் வாய்ந்து, பேர்பெற்றுத் திகழ்ந்த கார்மேகம் என்னும் கவிஞர் பெருமான், செந்நாப் புலவர் திடீர் என மறைந்த செய்தி யுணர்ந்து செயலற்று வயமற்றுச் சிந்தை வருந்தினேம். செந்நாப் புலவர். மறைவு நம் செந்தமிழ்த் தாய்க்கு ஈடுசெய்ய இயலாத நீடுநினைந் திரங்கத்தக்க பெரும்பொருள் இழப்பு என்றே கருதுகின்றேம். கார்மேகம் என்ற தவப் பெரும் புதல்வரையிழந்த தனிக்கொடுந்துயரை எங்ஙனம் ஆற்றுவள் தமிழ்த்தாய்! அந்தோ! என்னே! விதியின் விளைவு!

இந் நாவலர் பெருமான், இராமநாதபுரம் மாவட்டம் அகத்தாரிருப்பு என்ற சிற்றூரில், ஆயர்குலச் சேயர் ஆக, ஆயர்பாடிக் கோன் இருளாயி அம்மாள் என்ற இருவருக்கும் புதல்வராகத் தோன்றினர். இவர் பிறந்தநாள் கி. பி. 1889-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 27-ஆம் நாள் என்பர். இளமைப் பருவத்தில் ஆண்டுள்ள பள்ளியிற் பயின்று நமது தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் இயல்புடையவர் ஆயினர். அகவை பத்திற்குமேல் கி. பி. 1901-ஆம் ஆண்டிற் பாலவனத்தம் குறுநில மன்னர் பாண்டித் துரைத் தேவர் அவர்களால் நான்காம் தமிழ்ச்சங்கமாக நாட்டப் பெற்ற தென்மதுரைத் தமிழ்ச் சங்கம் வந்துசேர்ந்தார். அதிற் கல்லூரி தொடங்கும்போதே மாணவராகச் சேர்ந்

தவர் இவர். பாலர் வகுப்பு, பிரவேச வகுப்பு, பாலபண்டித வகுப்பு, பண்டித வகுப்பு என நான்கு வகுப்பு இருந்தன. ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டாண்டு பயின்று தேர்ந்து பண்டித பட்டம் பெறவேண்டும் என்ற விதியும் அமைந்திருந்தது. அவ்விதிப்படி அத் தமிழ்ச் சங்கத்தில் எட்டாண்டுவரை தங்கியிருந்து முறையே தமிழ் இலக்கணம் இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்து பண்டித பட்டம் பெற்றவர் இவர். பொற்பதக்கம் பரிசும் பெற்றுச் சான்றிதழும் பெற்றிருந்தனர். பட்டமும் பரிசும் பெற்றுப் பாவலராக வந்தவுடன் மதுரை அமெரிக்கன் கல்லூரியார் தமிழ் ஆசிரியராக வரவழைத்தார். ஆண்டு வந்து முதலில் அருந்தமிழ்ப் பணிபுரியத் தொடங்கினர்.

அமெரிக்கன் கல்லூரியில் கார்மேகப் பாவலர் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய காலம் ஆங்கில அரசு ஓங்கிய காலம்; தமிழ் மொழி யார்வம் நீங்கிய காலம்; அக் காலத்து மாணவர்கள் யாவரும் இவரைக் கண்டு அஞ்சி யடங்கி யொடுங்கி ஆணைவழி ஒழுகினர் என்றால் இவரது செந்தமிழ்ப் புலமைத் திறத்தை எடுத்துக் கூறவும் வேண்டுமோ? கார்மேகம் போன்ற படிவத்தின் தோற்றம்; இடிநிகர்த்த குரலொலியின் ஏற்றம், இனிமையுறப் பேசும் தமிழ்மாற்றம், பாட்டை இசையுடன் படிக்கும் பண்பு, பொருள் விளக்கும் புதுமை இவற்றைக் கண்டு வியவாத மாணவர் எவரும் இரார் என்றே மதிக்கின்றேம். கல்லூரி மாணவர்களிடை நன்மதிப்புப் பெற்ற தமிழ் ஆசிரியர் இவர் ஒருவரே அக் காலத்தில் எனத் துணிந்து கூறலாம்.

"ஆங்கிலம், கணக்கு, இயற்கை முதலிய பாடம் கற்பிக்கும் பேராசிரியர் வகுப்பிற்குப் பின்தங்கும் மாணவர்களும் தமிழ்ப் பேராசிரியர் கார்மேகக் கோன் அவர்கள் வகுப்பில் முன்தங்க விழைவார்; கண்டவுடன் எழுந்து வணக்கம் காட்டி அமர்ந்தவுடன் அமர்வார்; சித்திரம் போல் அமர்ந்து செவிசாய்த்துக் கேட்பர்; எவரும் எழுந்து செல்ல மனம் இசையார். செந்தமிழ் மொழியார்வம் செறிந்த சிந்தையுடன் வந்தனை புரிந்து அவர் வழியொழுகுவார். அமெரிக்கன் கல்லூரியில் தனிப் பெருஞ் சிறப்புத் தமிழ்ப் பேராசிரியர்க்கே தருவர் மாணவர்" என அக் கல்லூரியிற் பயின்ற மாணவர் பலர் பலகாற் கூறக்கேட்டிருக்கின்றேம். கல்லூரித் தமிழ் ஆசிரியர்களில் இவரைப்போலப் புகழும் பெருமையும் வாய்ந்தவர் ஒருவரும் இலர். முப்பத்தேழு ஆண்டுகள் தொடர்ந்து ஆசிரியப் பணிபுரிந்தனர் எனில் எத்துணை மாணவர் இவர்பாற் கல்வி பயின்றவர் என எண்ணவுங் கூடுமோ? அத்துணை மாணவரும் உள்ளம் பதைத்துருகி நிற்பரன்றே இன்று!

இவர் சென்னைப் பல்கலைக் கழகப்பாடத்திட்டம் அமைக்கும் குழுவினரில் ஒருவராக அமர்ந்து இருபத்தேழு ஆண்டுகள் தொடர்ந்து தமிழ்ப் பணியாற்றினர். அண்ணுமலைப் பல்கலைக் கழகம், திருவாங்கூர்ப் பல்கலைக் கழகம் இவற்றில் தேர்வாளர் குழுவில் ஒருவராகச் சிறப்புப் பெற்றிருந்தார். முதலில் தாம் தமிழ் பயின்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தை வளர்க்க என்ஞான்றும் எண்ணினர். சங்கத்தேர்வுக்குழு, கல்விக்குழு, ஆய்வுக்குழு ஆகியவற்றில் இவர் கலந்து செயலாற்றும் ஊக்கமும் உழைப்பும் உறுதியும் உடையவராய் இறுதிவரை இருந்தனர். தமிழ்மன்றம், தமிழ்க் கல்லூரி, தமிழ்க் கழகம் நிறுவுவதும் வளர்ப்பதும் வழிகாட்டுவதும் இவர் புரியும் செயல்களாக என்றும் திகழ்ந்தன.

நல்லிசைப் புலவர், கண்ணகிதேவி, ஆபுத்திரன் வரலாறு, காப்பியக் கதைகள், தமிழ்மொழியின் மறுமலர்ச்சி என்ற உரை நடை நூல்கள் இயற்றித் தமிழ் மாணவர் கற்றுப் பயன்படப் புரிந்தனர். மலைபடுகடாம், புறப்பொருள் வெண்பாமாலை, திருவள்ளுவரும் திருக்குறளும் என்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அவரால் இயற்றப்பெற்று வெளிவந்தன. மாணவர்கட்குப் பாடப் புத்தகங்களாகத் தொகுத்துத் தந்தனவும் பலவே. தமிழ் மொழி தழைக்க, தமிழ்நாடு சிறக்க, தமிழர் பண்பாடு வளர என்ஞான்றும் உழைத்தவர் இவரே.

கி. பி. 1914-ஆம் ஆண்டு தொடங்கி 1951-ஆம் ஆண்டு வரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய் அருந் தமிழ்த்தொண்டு புரிந்தார். பின் ஓய்வுபெற்றார். ஓய்வுபெற்ற பின்னும் தமிழ்நூல்கள் இயற்றுவதும், தமிழ்நாடெங்கணும் சென்று சொற்பொழிவாற்றுவதும், தமிழ்மொழியாக்கத்திற்கு வேண்டுஞ் செயல்கள் புரிவதும் ஆகிய தமிழ்த்தொண்டு புரிந்தே வாழ்ந்திருந்தார்.

தென்மதுரை வடக்காடி வீதித் திருவள்ளுவர் கழகத்தில் சென்ற 21-8-1955 எமது கழகத்தின் சார்பில் நிகழ்ந்த ஐங்குறு நூற்று மாநாட்டில் தலைமை தாங்கித் தலைமையுரை நிகழ்த்திச் சிறப்பித்தவரும் இந் நாவலர் பெருமானே. "என் கடன்பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் திருவாக்கிற்கு எடுத்துக் காட்டாக இலங்கினர்.

திருவள்ளுவர் கழகம் செந்தமிழ் வளர்க்கும் செயலகமாகத் திகழ்கின்றது. மூவைந்தாண்டுகளாக நாளுக்குநாள் முன்னேறி வருகின்றது. ஐங்குறுநூற்று மாநாடு நிகழ்ந்த இடமும் அது. புகழ்பெற்ற புலவர்க்குப் பொன்னடை போர்த்துப் பாராட்டும்

பணியை மேற்கொண்டுள்ளது அக் கழகம். எனவே பேராசிரியர் கார்மேகக்கோன் அவர்களுக்கும் பொன்னுடை போர்த்துப் புகழ் பெற விழைந்தது. நன்னாளில் அன்னாரை யழைத்துத் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் அமைப்பாளர் ஆக, நாவலர் திரு. ச. சோம சுந்தர பாரதியார் தலைமையில் பொன்னுடை போர்த்து செந்நாப் புலவர் என்ற சிறப்புப் பட்டமும் வழங்கியது. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் சொல் லாற்றலுடையர் என ஆய்ந்து வழங்கிய பட்டம் தகவுடைய தன்றோ!

இத்தகைய பட்டமும் பரிசும் பெற்றுப் பல ஆண்டுகளாகத் தமிழ் நாட்டுத் தலைசிறந்த நகரமாகிய மதுரையிற் சீருஞ்சிறப்பும் வாய்ந்த செல்வராக வாழ்ந்தார் இவர். சிலதிங்கட்கு முன்னே இவரது வாழ்க்கைத் துணைவியார் பத்மாசனியம்மாள் என்பவர் மாய்ந்தார். அடுத்து இவரது அருமைப் புதல்வர், குடும்ப முதல்வர், அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து பணியாற்றியிருந்தவர் ஆகிய கா. கிருட்டிணன் அவர் களும் திடீரெனத் துஞ்சினர். இவ்விருவரும் மாய்ந்த துயரம் மனத்துட் புகுந்து மாறாது நின்று மயக்கத்தை விளைத்தது. நெஞ்சுநோயாய் எவர்க்கும் தெரிந்தது. குருதி உடலிற் குறைந்து மெலிந்தார். புதிய குருதியை மருத்துவர் புகுத்தி அரிய மருந்துகள் அருத்தியும் பயனில்லை. கார்மேகம் என்னும் பேர்மேவிய பாவலர் ஏவிளம்பி ஆண்டு ஐப்பசித் திங்கள்-எ ஆம் நாள் புதன்கிழமை மாலை மறைந்தார்.

செந்நாப் புலவர் மறைந்த செய்தி மதுரைமா நகர் எங் கணும் பரவியது. தமிழ் அன்பர்களும் தமிழ்ப்பெரும் புலவர் களும் ஆசிரியப் பெருமக்களும் மாணவர் குழாமும் அன்று இரவுமுழுவதும் அவர் இல்லத்திற்கு வருவதும் போவதும் ஆக வருந்தி யிருந்தனர். மறுநாள் அன்னார் மறைவுக்கு அறிகுறி யாக இரங்கல் காட்டு முறையில் முன்பு பணியாற்றிய அமெரிக் கன் கல்லூரி மூடப்பட்டது. பின்னர் நாவலர் உடல் வள்ளுவர் கழகம் போர்த்த பொன்னுடையால் மூடப்பட்டு, எழுத்தாளர் சங்கம் முதலிய பல நிலையங்கள் சார்பில் கொண்டு வந்த மலர் மாலைகள் சூடப்பட்டு எடுத்துச் செல்லும் தேர்மேல் ஏற்றி நன் காட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டது. உறவினர், நண்பர், ஊரவர் யாவரும் திரண்டு பெருங்கூட்டமாக நின்றனர். அக் கூட்டத்தினிடையே தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் மனக்கவலையோடு அவரது பிரிவு குறித்துச் சில சொற்கூறி வருந்தினர். இவரது பண்பும் அன்பும் புலமைத் திறமும் தமிழ்ப் பணியாற்றிய தகவும், சங்கம் வளர்த்த தனிப் பெருஞ் சிறப்பும்

எங்கும் புகழ் பெற்றிருந்த பெருமையும் இன்றோடு மறைந்ததே என ஏங்கினார். பின்னர் அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சோதிமுத்து என்பவரும் அரசியல் அதிகாரி இலட்சுமணப் பெருமாள் அவர்களும் கருமுத்துசுந்தரஞ் செட்டியாரவர்களும் மற்றும் பல தமிழ் அன்பர்களும் மனங்கலங்கிச் செயல் மறந்து பலவாறு புலம்பி ஆறுதல் தேறுதல் அடைந்து இடுகாட்டுக் கடனை முடித்து இல்லம் சென்றனர். பூதவுடல் போய் மறைந்தது. புகழ் உடம்பு பொன்றாமல் என்றும் குன்றாமல் நின்று நிலவும் என்பது ஒருதலை.

தமது மனைவாழ்க்கைக்குத் துணையாக இருந்து வாழவழி காட்டும் குரவர்கள் ஆகிய தாயர், தந்தையர், தமையனார் என்ற மூவரையும் ஒருங்கே இழந்து கண்ணீர் வடித்துக் கதறிப் புலம்பிக் கவலைக் கடலுள் மூழ்கியிருக்கும் இளமைப் பருவமுள்ள பெண்மக்களுக்கும் ஆண்மக்களுக்கும் ஆறுதல் தேறுதல் கூறுதல் எங்ஙனம்? குடும்பத்திற்கு உற்ற இடும்பை கொடிது, விதியென மதித்துத் தேறுக.

இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து தமிழ்த்தொண்டு புரியும் தகவுடைய செந்நாப் புலவர் இந்நாள் மறைந்தது தமிழர் தவக்குறையே. இக்குறை நீக்கும்வகை யறியாது மயங்குகின்றோம். கார்மேகம் என்னும் கவிஞர் பெருமான் ஆருயிர், இறைவன் திருவடி நீழல் எய்தி இன்பும் அமைதியும் பெறுக எனத் திருவருளை நாடி வாழ்த்துகின்றோம்.

---

## இராகு காலம் காண்டல்

திங்களணி சங்கரனார் வெண்ணீறு புற்றரவு
விளங்குமவர் சென்னியிலே ஞாபகங் கொள்வாம்.

இப் பாவில் ஈற்றயற் சீர்வரையுள்ள ஒவ்வொரு சீரின் முதல் எழுத்தும், வாரத்தின் ஏழு நாட்களின் முதல் எழுத்தைக் குறிக்கும். இப்பாவினை மனதில் நன்கு நினைவிற் பதிக்க. பின் நமக்கு எந் நாளது "இராகு காலம்" காண வேண்டுமோ அந் நாளுள்ள சீர்வரையில் முதலிலிருந்து ஒன்றரை, ஒன்றரை மணிகளாகக் கூட்டிக்கொள்க. அங்ஙனம் கூட்டுங்கால் "திங்கட்கிழமை"யின் சீராகிய "திங்களணி" எனும் முதற் சீருக்கு $7\frac{1}{2}$ மணி முதல் 9 மணி வரை எனக் கொண்டு, பின்பு முறையே கணக்கிடின் எக் கிழமைக்கும் இராகு காலம் காணலாம்.

---

# பேராசிரியர் சுந்தரம் பிள்ளை
# நினைவு மலர் வெளியீட்டு விழா

தமிழ்க்கலை மன்றம், தென்னிந்திய தமிழ்ச் சங்கம் என்னும் இவைகளின் சார்பாக இவ்வாண்டு, அக்டோபர்த் திங்கள் இருபத்து ஒன்பதாம் நாளன்று மனோன்மணீயப் பேராசிரியர் திரு. சுந்தரம் பிள்ளையவர்களின் நினைவு மலர் வெளியீட்டு விழா சென்னை இராசாசி மண்டபத்தின்கண் மாலை 6 மணிக்கு நிகழ்ந்தது. அவ்வமயம் சென்னை முதலமைச்சர், திரு. காமராசர் அவர்கள் தலைமை தாங்க, கல்வியமைச்சர், திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் நினைவு மலரை வெளியிட்டார்கள். பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் மாண்பையும், உயர்வையும் பாராட்டி திரு. வித்துவான்; தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை; எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல்., அவர்களும், திரு. டாக்டர், மு. வரதராசனார். எம்.ஏ , பி.எச்.டி , அவர்களும், திருவாட்டி. மேரி மாசிலாமணி அம்மையார், எம்.ஏ., அவர்களும், திரு. டாக்டர், கே. கே. பிள்ளை, எம்.ஏ., டி.பில்., டி.லிட் , அவர்களும், திரு. டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல் , டி.லிட்., அவர்களும் சொற்பெருக்காற்றினார்கள். அன்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுக் கருத்துக்களும் வருமாறு :—

விழாத் துவக்கத்தில் முதற்கண், நடிகமணி, திரு. டி. கே. சண்முகம் அவர்கள், "நீராரும் கடலுடுத்த", "பல்லுயிரும் பலவுலகும்"—எனும் பாக்களை மிகவும் உருக்கமாகப் பாடினார்கள்.

பின், மன்றச் செயலாளராகிய திரு. இராவ்சாகிப், கே. கோதண்டபாணிப் பிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில்,

" புலவர்களைப் போற்றுவது நமக்குப் புதுமையன்று; இது பண்டைக்காலந் தொட்டு வழிவழியாய் வரும் நம் மரபே; ஒரு புலவனைப் பாராட்ட நம்முடன் அரசியலாரும் கலந்து கொண்டமை நாட்டிற்கும், மொழிக்கும், புலமைக்கும் பெருமை தருவதாகும்; நம் மொழி உயர்வுக்கு முத்தமிழ்ப் பகுப்பும் பல இயல், இலக்கிய வளமு மிருப்பினும் சேக்ஸ்பியர் போன்ற நாடகமின்மை வருந்துதற்குரியதே. இரண்டாயிரம் யாண்டுகட்கு முன் நம் மொழியில் நாடகங்கள் இருந்தனவாம்; சிலம்பு, கம்ப இராமாயணம் போன்றவை நாடகக் காப்பியங்களே யன்றி நாடக நூல்கள் அல்ல. அக் குறையை நீக்கி அருளியவர் திரு. சுந்தரம்பிள்ளை ஆவர்; இப் புதிய ஆக்கத்தையும் மொழி வளத்

## பேராசிரியர்

# சுந்தரம் பிள்ளை நினைவுமலர் வெளியீட்டு விழா



முதலமைச்சர் காமராசர் தலைமையுரையாற்றுதல்



# பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

# நினைவு மலர் வெளியீட்டு விழா

தமிழ்க்கலை மன்றம், தென்னிந்திய தமிழ்ச் சங்கம் என்னும் இவைகளின் சார்பாக இவ்வாண்டு, அக்டோபர்த் திங்கள் இருபத்து ஒன்பதாம் நாளன்று மனோன்மணீயப் பேராசிரியர் திரு. சுந்தரம் பிள்ளையவர்களின் நினைவு மலர் வெளியீட்டு விழா சென்னை இராசாசி மண்டபத்தின்கண் மாலை 6 மணிக்கு நிகழ்ந்தது. அவ்வமயம் சென்னை முதலமைச்சர், திரு. காமராசர் அவர்கள் தலைமை தாங்க, கல்வியமைச்சர், திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் நினைவு மலரை வெளியிட்டார்கள். பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் மாண்பையும், உயர்வையும் பாராட்டி திரு. வித்துவான்; தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை; எம்.ஏ., பி எல்., எம்.ஓ.எல்., அவர்களும், திரு. டாக்டர், மு. வரதராசனார். எம்.ஏ., பி.எச்.டி, அவர்களும், திருவாட்டி. மேரி மாசிலாமணி அம்மையார், எம்.ஏ., அவர்களும், திரு. டாக்டர், கே. கே. பிள்ளை, எம்.ஏ., டி.பில்., டி.லிட், அவர்களும், திரு. டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல், டி.லிட்., அவர்களும் சொற்பெருக்காற்றினார்கள். அன்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுக் கருத்துக்களும் வருமாறு :—


விழாத் துவக்கத்தில் முதற்கண், நடிகமணி, திரு. டி. கே. சண்முகம் அவர்கள், "நீராரும் கடலுடுத்த", "பல்லுயிரும் பலவுலகும்"—எனும் பாக்களை மிகவும் உருக்கமாகப் பாடினார்கள்.

பின், மன்றச் செயலாளராகிய திரு. இராவ்சாகிப், கே. கோதண்டபாணிப் பிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில்,

"புலவர்களைப் போற்றுவது நமக்குப் புதுமையன்று; இது பண்டைக்காலந் தொட்டு வழிவழியாய் வரும் நம் மரபே; ஒரு புலவனைப் பாராட்ட நம்முடன் அரசியலாரும் கலந்து கொண்டமை நாட்டிற்கும், மொழிக்கும், புலமைக்கும் பெருமை தருவதாகும்; நம் மொழி உயர்வுக்கு முத்தமிழ்ப் பகுப்பும் பல இயல், இலக்கிய வளமு மிருப்பினும் சேக்ஸ்பியர் போன்ற நாடகமின்மை வருந்துதற்குரியதே. இரண்டாயிரம் யாண்டுகட்கு முன் நம் மொழியில் நாடகங்கள் இருந்தனவாம்; சிலம்பு, கம்ப இராமாயணம் போன்றவை நாடகக் காப்பியங்களே யன்றி நாடக நூல்கள் அல்ல. அக் குறையை நீக்கி அருளியவர் திரு. சுந்தரம்பிள்ளை ஆவர்; இப் புதிய ஆக்கத்தையும் மொழி வளத்

பேராசிரியர்

# சுந்தரம் பிள்ளை நினைவுமலர் வெளியீட்டு விழா



முதலமைச்சர் காமராசர் தலைமையுரையாற்றுதல்





பேராசிரியர் டாக்டர். மு. வரதராசனுர் சொற்பொழிவாற்றுதல்



திரு. டி. கே. சண்முகம் இசை வழங்குதல்

தையும் தந்த புலவர் பெருமானைப் பாராட்ட அனைவரும் கூடியுள்ளமைக்கு என் நன்றி" எனக் கூறினார்.

அடுத்துத் தலைமை தாங்கிய முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் பேசுகையில், "தமிழகத்திற் பிறந்த ஒவ்வொருவருக்கும் நாட்டின் உரிமை உணர்ச்சியும், மொழி உணர்ச்சியும் ஏற்பட்டுள்ளன; தமிழ்ப் புலவர்கட்கு நாம் எப்பொழுதும் மரியாதை செலுத்தி வருகிறோம்; அம் முறையில் இன்று நாம் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கட்கு நாம் விழா நடத்திப் பாராட்டுவது, நம்மையும், நம் மொழியையும் நாம் மதிப்பதற்கொப்பாகும்"—என்றார்.

பின்பு, நினைவு மலரை வெளியிட்ட கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில்,

"இவ் விழாவில் கலந்துகொள்ள வாய்ப்பு நேர்ந்தமைக்கு எனது நன்றி; திரு. டி கே சண்முகம் பாடிய கடவுள் வாழ்த்தில் "எத்திசையும் புகழ் மணக்க இருந்த"—என்ற பாவில் "இருந்த"—என்பதை "இருக்கும்" எனப் பாடவேண்டும்; இங்ஙனம் நம் தமிழ் முன்னேறி வளர்ச்சியுற விரும்புகிறோம். இதை நிறைவேற்றுபவர்கள் புலவர் பெருமக்கள்; நாம் அவர்களின் பழம்பெருமைகளை மட்டும் பேசாமல் புதிய கருத்துக்களை வழங்கி, நாம் செய்யும் பணியைப் பிறரும் மதிக்கும்படி செய்ய வேண்டும்; ஆங்கிலத்தை நாம் விரும்பும் காரணம், அதன்மீது கொண்டுள்ள பற்றல்ல; அம் மொழியில் விஞ்ஞானம் முதலியன முன்னேறி, உலகில் ஓர் உயர்ந்த இடம் அடைந்தமையே காரணம் ஆகும்; இதைப்போல் தமிழும் உயர விரும்புகிறோம்; தமிழர்கள் தமிழைப் போற்றிப் புலவர்களை ஆதரிக்கின்றனர் என்பது மட்டுமன்றி, பிறநாட்டினரும் ஆதரித்துப் போற்றுமாறு செய்யவேண்டும். இது நிறைவேறத்தக்க சூழ்நிலை தேவை; ஒரு செடி வளர எங்ஙனம் தக்க சூழ்நிலை தேவையோ, அங்ஙனே மொழி வளரவும் தக்க சூழ்நிலை தேவை; அங்ஙனம் தக்க சூழ்நிலையை ஏற்படுத்தும் தமிழ் மக்களாக நாம் இருக்க வேண்டும். இதை நிறைவேற்றுவதைப்போல் சுந்தரம்பிள்ளையவர்களின் நினைவுநாளைக் கொண்டாடக் குழுமியுள்ளோம். சுந்தரம பிள்ளையவர்களின் நூலைப் போன்று பல நூல்கள் நம் மொழியில் தோன்ற வேண்டும். ஆங்கிலம் ஆட்சிமொழியாகப் புகுத்தப் பட்ட காலத்தில் ஒரு பேராசிரியர் செய்த இப்பணி, காலத்தாற் செய்தது; அது இன்று ஞாலத்தினும் பெரிதாக உள்ளது; அவர் ஆலப்புழையில் பிறந்து, திருவாங்கூரில் வாழ்க்கை நடாத்தி தமிழ்ப் பணி செய்தாரெனின், தமிழெல்லை மேற்குத் தொடர்ச்சி மலையொடு நின்றதென்பது ஒக்குமோ?" என்று பேசினார்.

பிறகு, பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் பேசுங்கால், மனோன்மணீயத்தை ஏந்திய கையராய் "மெய்ப்பொருள்" என்ற தலைப்பின்கண் பின்வருமாறு சொற்பெருக்காற்றினார்கள்.

"நம் மொழி அழகிதம்மா" என்று பாடும்படியாக வீற்றுள்ளது. நினைவு மலரைக் காணுங்கால் இந் நூலுள் ஒரு கட்டுரை எழுதிய அம்மையார் இன்று உயிரோடு இல்லை. இவ்வளவு இடையீடு பட்டோ கொண்டாட வேண்டும்? 1947, 1955 ஆண்டுகளிலேயே கொண்டாட முயன்றும் கொண்டாட இயலவில்லை. குழந்தைகட்கு மருந்து தருங்கால் வெல்லமும் கலந்து தருதலை ஒத்து, சுந்தரம் பிள்ளையின் நூலையும் காணுங்கால் 'மெய்ப்பொருள்' என்னும் சுவை தோன்றும்; நாடகமும், இன்பமும் முன்வர, அழகும், தத்துவமும் (மெய்ப்பொருள்) பின் வரும்; அவர் மாணவர்கள், 'பிள்ளையவர்கள் நாற்காலியில் உட்காராது மேசையில் உட்கார்ந்து கொண்டு மெய்ப்பாடு கலந்த அனுபவ மெய்ப்பொருளோடு கூறுவார்' என்று சொல்வார்கள். திரு. சுந்தரம் பிள்ளை தம் குருவாகிய கோடகநல்லூர் சுந்தர அடிகளை மறக்கவில்லை. அவர் நாடகமே அதற்குச் சான்றாகும். அவர் நாடகம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இழிந்த மக்கள் முதல உயர்ந்தோர்வரை தோன்றுகிறது. இதுவே மெய்ப்பொருளாகும்; இதுவே நாடகச் சிறப்புமாகும்; இலக்கியம் இன்பந் தந்து, பேரின்பம் சுட்டுவது. ஆனால் மனோன்மணீயம் அனைவருடைய வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்டு எழுதியது. நாடகத்துள் வரும் சீவகனை நம் உயிராகவும், குடிலனை மாயா சத்தியாகவும், மனோன்மணியைப் பரிபூரணம் அடையும் உயிர்த் தன்மையாகவும், வாணியைப் புத்தியாகவும், நடராசனைத் தலைவனாகவும், (உபாசனா மூர்த்தி) சுந்தர முனிவரை ஞான ஆசானாகவும் கொண்டு அவர் எழுதியுள்ளார். இவர் 'லார்டு லிட்டன்' எழுதியதைத் தழுவி எழுதியிருப்பினும், முதல் நூலையும் இதையும் ஒப்பிடுங்கால் எறும்புக்கும் யானைக்கும் உள்ள வேறுபாடு உள்ளது பொருளற்ற முதனூலைப் பொருளுடையதாக்கியது மனோன்மணீயம." மேற்கண்டவாறு சொற்பெருக்காற்றிய பேராசிரியர் "கடையூழி" "சீரும் எதுகையும்," "சிறிதாயினும் பற்றினலும்" எனும் பாக்களைப் படித்து அதன் சுவையை எடுத்துரைத்தார்.

பிறகு, பேராசிரியர் டாக்டர், மு. வ. அவர்கள் பின்வருமாறு நீண்ட சொற்பொழிவாற்றினார்கள்.

"இதுவரை மெய்ப்பொருள் கேட்டீர்கள்; இனி, பொய்ப்பொருள் பேசவேண்டும். 'நாடகமே உலகம்' எனும் பொய்ப்பொருளே, மெய்ப்பொருள். இருள் உண்மையானே, ஒளிக்கு

உயர்வு. உலகில் எங்கும் மெய்ப்பொருள்களிருப்பின், பொய்ப் பொருள் விளங்காது. திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் தத்துவப் பேராசிரியராக இருந்து, நாடகக் கலையுள் ஈடுபட்டு, நாட்டுப்பணி செய்தார். நாடகம் எழுத நாடகக் கலை அனுபவங்கள் வேண்டும். சுந்தரம் பிள்ளைக்கு மூல அறிவைத் தந்தது, நம நாடு அடிமைத் தளையுள் இருந்தமையே. ஆங்கில ஆளுகையுள் நம் நாடு இருந்தகாலை நன்மைகள் சிலவும, தீமைகள் பலவும் விளைந்தன. அந் நன்மையுள் ஒன்றே, நமக்கும் சேக்ஃஸ்பியருக்கும் ஏற்பட்ட தொடர்பாகும். சேக்ஃஸ்பியரை சுந்தரம் பிள்ளை ஆழ்ந்து பயின்று, நாடகத்தில் ஊறியமையானே, மனோன்மணீயத்தை நாம் அடைய முடிந்தது. 'நிற் புகழ்ந்தேத்தும்' எனும் பாவில் 'பழைமையைப் புதுமையாக்கவே இந் நாடகப் பணியைப் புதுமை யாக ஆற்றுகிறேன்' எனக் குறிப்பிடுகிறார்; தமிழுக்குக் கால் விரலணியாக மனோன்மணீயத்தை அணிவித்தார். மனோன்மணீ யம் படிக்கவே எழுதப்பட்டது; சேக்ஃஸ்பியர் நாடகமோ நடிக் கவே எழுதப்பட்டது. படிப்பதற்காக எழுதப்பட்ட மனோன்மணீ யம் நாடக அரங்கு வழியாக திரைப்படம்வரை வளர்ந்தது. நடிப்ப தற்காக எழுதப்பட்ட சேக்ஃஸ்பியரோ இலக்கியமாக வளர்ந்தது. மனோன்மணீயத்துள் கவிதை நடை மிளிரும் இலக்கியத் தமிழ் தலைசிறந்து விளங்குகின்றது. கவிதை நாடகத்தின் வாயிலாகவே உயர்வினை எய்த இயலும். நம்மைத் திளைக்கச் செய்யும் 'கவிதைத் தமிழை'ப் பயிலும்போது 'கவிதை' என்பதையே மறந்துவிடுகின்றோம். 'எலியட்டி'ன் சொற்களை மெய்ப்பித்தவர் சுந்தரம் பிள்ளை. ஒரு நாடகம் நன்கு விளங்க, தீயவனும் படைக்கப்பட வேண்டும். அதுவே நாடகச் சிறப்பு. நாடகத்துள் வருபவர்கள் உலக வாழ்வியலில் உள்ளவர்களாக அமைய வேண்டும். சீவகனைப் போன்ற அப்பாவிகள் இன்றும் உலகில் பலர்; நடராசன் போன்ற நல்லோர்களும் பலர்; சுந்தர முனிவரைப் போன்றோர் அரியர். அறிவுத் திறனைக் கொண்டு உலகை ஏய்க்கும் பலதேவன், குடிலன் முதலியோர் பலர்; இங்ஙனம் 'நாடகமே உலகு' எனச் சுந்தரம் பிள்ளை நாடகப் பணி ஆற்றினார்."

பிறகு பேசிய திருவாட்டி மேரி மாசிலாமணி அம்மையார் அவர் கள் "மனோன்மணீயத்தில் வரும் இரு பெண்மணிகளும், இருவகை யில் உயர்ந்த குறிக்கோளுடையோராவர்; மனோன்மணி மலராத மனமுடைய பண்டைய பண்பாடு உடையவள்; வாணி தற்காலப் பெண்மணியை ஒத்த "நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும்" எனும் பாரதியின் சொல்லுக்கு இலக்கியமானவள். சுந்தரம் பிள்ளையவர்கள், தமது நாடகத்துக்குப் பெண்ணின் பெயரில் தலைப்பமைத்துப் பெண்ணுக்கு உயர்வு தந்துள்ளார்;

'பெண்ணைக் கட்டாயப்படுத்தி மணக்கச் செய்யாதீர்' என அறிவுரை தருகிறார். அந் நூலையும் அவரையும் வாழ்த்துவோம்" என்று கூறினார்கள்.

பிறகு வரலாற்றுப் பேராசிரியர், திரு. டாக்டர், கே. கே. பிள்ளை அவர்கள் பேசும்பொழுது,

"தென்னிந்திய வரலாற்றுக்குப் புத்துயிர் அளித்தவர் திரு. சுந்தரம்பிள்ளை ஆவர்; இதுகாறும் வரலாறு எழுதியவர்கள் 'இந்தியா எனின் வட இந்தியா' என எழுதியுள்ளனர்; திரு. சுந்தரம்பிள்ளை 'தென் இந்தியா, உண்மை ஒளி' என்று வரலாற்று வசதிகள் அற்ற அக்காலத்திலேயே மெய்ப்பித்துள்ளார். திரு. சுந்தரம்பிள்ளை ஊர் ஊராகச் சுற்றிக் கல்வெட்டுகளை ஆய்ந்து பரப்பி, ஒரு முடிவுக்கு வந்தவர்; ஞானசம்பந்தர் காலத்தை வரையறை செய்தவர்; சுருங்கிய சொற்களால் விளங்க வைக்கும் கருத்துக்கள் செறிய எழுதும் ஆற்றல் கெழுமியவர்; சுந்தரம் பிள்ளை ஒரு பொருளை முடிவு செய்ய வேண்டுமாயின் முற்றுற ஆராய வேண்டும் எனக் கூறியுள்ளார். அவருக்கும் அவரைப் போன்றோர்களுக்கும் விழா நடத்துவது நமக்குப் பெருமை செய்வதை ஒக்கும்" என்று குறிப்பிட்டார்கள்.

ஈற்றில் பேசிய திரு. டாக்டர், ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், "இதுகாறும் பேசிய பேராசிரியர்கள் மெய்ப்பொருளென்பது தத்துவம், நாடகம், பெண்மை, வரலாறு என முறையே மொழிந்தனர். இந் நாள் வரலாற்றிலொரு பொன்னாள்; தமிழ் மகனைப் போற்றும் நாள். நாம் இலக்கியப் பெருமக்களையும், இலக்கியத் தந்தையரையும் போற்றவேண்டும் எனும் ஆசை எங்குமுள்ளது. அம்முறையில் சுந்தரம் பிள்ளையின் பணியை நாம் பாராட்டுகிறோம். மனோன்மணீயம் தாமிரபருணியின் கரையில்தான் எழுந்தது; தெற்கே தாமிரபருணி முதல்தான் இனி வரலாறுகள் எழுதப்படல் வேண்டும். சுந்தரம் பிள்ளையின் ஆசிரியர் கோடக நல்லூர் சுந்தரவடிகள் சுந்தரம் பிள்ளைக்குப் பாடம் பயிற்றுவித்தது, திருநெல்வேலி தெற்கு ரத வீதியின் கண்ணாகும். அங்கிருந்து கொண்டு அன்னார் ஒரு மொழி நூலையே வெளியிட்டார். திரு. சண்முகம் பாடியபொழுது பொதியம் போன்றன்றி, இமயம்போல் நம் உள்ளங்கள் விம்மின. அப் பாவில் பொதுத் தன்மையும், சிறப்புத் தன்மையும் உள்ளன; வடமொழியும், தென் மொழியும் பல குழவிகள் ஈன்றமை பொதுப் பண்பாகும்; ஆரியம் அழிந்துபட, சீரிளமைப் பண்புடன் நம் மொழி விளங்கி வருவது சிறப்புப் பண்பாகும். ஒத்த பல மொழிகள் வழக்கு அழிய, அழியாது நிலைத்து விளங்குவது நம்மொழி. திரு. சுந்தரம் பிள்ளை, மலையாளத்தையும்

தமிழையும் ஆய வேண்டும் எனக் கருதினர். மலையாள ஊர்களும் சொற்களும் தமிழ்ச் சொற்களே" என்று பேசி, "என்பு" என்ற சொல்லைத் தனது வாழ்க்கையின் ஒரு சிறு நிகழ்ச்சியுடன் ஆய்ந்து முடித்தார்கள். இறுதியில் திரு. டி. கே. சண்முகம் அவர்கள் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்பேரில் பாடப் பெற்ற கவிமணியின் பாக்களை உருக்கமாகப் பாடினர்கள்.

இறுதியில் தென்னிந்திய தமிழ்ச் சங்கச் செயலாளரும், சைவ சித்தாந்தக் கழகத்தின் ஆட்சியாளருமாகிய திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் முடிவுரையும் நன்றியுரையும் கூறுங்கால்,

"நினைவு மலர் வெளியீட்டு விழாவாகிய இன்று, நினைவு மலரைப்பற்றிச் சொற்பொழிவாற்றுபவர்கள் குறிப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒருவரும் குறிப்பிடாமைக்கு வருந்துகின்றேன். இம் மலருள் பேராசிரியர்கள் முப்பத்திருவர் முப்பத்திரண்டு கட்டுரைகள் வரைந்துள்ளனர். அவற்றுள் 'மெய்ப் பொருள்' பற்றிப் பதின்மரும், வரலாறு பற்றி ஒன்பதின்மரும், மொழி பற்றிப் பதின்மரும், பின்இணைப்பாக மூவரும் கட்டுரைகள் வரைந்துள்ளனர் தமிழ்க் கலைமன்றமும், தென்னிந்தியத் தமிழ்ச்•சங்கமும் பெரும்பணி செய்து வருகின்றன. இம் மலர் சூன் திங்களின்கண்ணேயே வெளியிடப்பட்டது. இவ் விழாவிற்குத் தலைமைதாங்க இசைந்தமைக்கு முதலமைச்சர் காமராசர் அவர்களுக்கு என் நன்றி. காமராசர் அவர்களின் ஆட்சித் திறனும், சிறப்பும் அனைவரும் அறிந்தவையே. தென் குமரியை நமக்குத் தந்தவர்; திருத்தணிகையை நமக்குத் தரப் போகின்றவர்"; என்று கூறி மறைமலை அடிகளுக்குச் சுந்தரம் பிள்ளை அவர்கள் தந்த சான்றிதழைப் படித்துக் காட்டி அனைவர் கட்கும் நன்றிகூறி முடித்தார்கள். பின் திரு. டி. கே. சண்முகம் அவர்கள் நாட்டுப் பாடல்பாடக் கூட்டம்இனிது முடிவுற்றது.

---

## ஐந்தெழுத்தாலாம் அனைத்தும்

[நாஞ்சில், திரு. கா. கணபதி]

செந்தமிழ் திளைக்க வேண்டின்
　　செம்மைசேர் வாழ்வு வேண்டின்
அந்தமில் இன்பம் வேண்டின்
　　அறிவினில் சிறக்க வேண்டின்
சிந்தையில் உறுதி வேண்டின்
　　செவ்விய தூய்ப்பு வேண்டின்
ஐந்தெழுத் தென்றுஞ் செப்பி
　　அகமகிழ்ந் திருத்தல் நன்றே.

# பேராசிரியர் சுந்தரம்பிள்ளை நினைவு மலர்

# வெளியீட்டு விழா வாழ்த்துக்கள்

*சீராருஞ் செந்தமிழே தெய்வமென் றும் பன்மொழிக்கும்*
*ஏராருந் தாயென் றிசைத்திடுநூற்—பேராரும்*
*சுந்தரம் பிள்ளையருள் தூய மனோன்மணீயம்*
*நந்தமிழ்க் கோர் நாயகமாம் நம்பு.*

*நம்பியவன் தத்துவநூல் நல்லவர லாற்றுநூல்*
*அம்புவியோர்க் கீந்தான் அவன்நினைவாச்—செம்பொன்போற்*
*பேரா சிரியர்கள் பெட்பொடுசெய் கட்டுரைநூல்*
*பூராவும் ஆய்தல் பொறுப்பு.*

*பொறுப்பாய் அனந்த புரத்தினிலே மன்னர்*
*சிறப்பாக ஓச்சியநற் செங்கோல்—மறுப்பின்றி*
*எல்லோரும் ஒப்பியநூல் ஏற்றதனைக் கற்றுணர்தல்*
*வல்லவர்க ளாகும் வழி.*

*வழிவகுத்த சுந்தரம் பிள்ளைதிரு வாக்கை*
*வழிவழியாக் கற்றுலகோர் வாழ—மொழிதமிழைப்*
*பேணுசங்க மன்றமுதற்* சுப்பையா கோதண்ட*
*பாணியிவர் செய்தார் பணி.*

**சித்திரக்கவிச்சரபம், புலவர், பி. வி. அப்துல்கபூர் சாகிப்,**
*திருவையாறு.*

*தமிழ்மொழி, சங்க இலக்கியம், தேவாரத் திருமுறைகள் ஆகிய வற்றின் பெருமையையும் அருமைப்பாடுகளையும் முதன் முதலில் தமது அரிய தமிழ் நாடகமாகிய 'மனோன்மணீயம்' வாயிலாக வெளிப்படுத்திய பேராசிரியர் பிள்ளையவர்களின் சீரிய நற்றொண்டைத் தமிழர்கள் மறவாதிருக்க இவ் விழா துணைபுரிய எல்லாம் வல்ல இறையருளை வாழ்த்துகின்றேன்.*

**கருமுத்து. தியாகராசன் செட்டியார்,**
*மதுரை.*

*பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தமிழ்நாடு செய்த தவத்தால் தோன்றிய பெருமகனார். பல்கலைக்குரிசில். அவருடைய தமிழ்த்தாய் வாழ்த்து தமிழ் இலக்கியத்திலேயே ஈடு இணை இல்லா வாழ்த்தாக விளங்கி வருகின்றது தமிழ்த்தாயின் தனிப்பெரும் புதல்வராம் சுந்தரம் பிள்ளை யவர்களுக்கு நம் நன்றியைத் தெரிவிக்குமுகமாக நினைவு மலர் வெளியிடுவது சாலப் பொருத்தமான செயலாகும். அச் செயலிலே ஈடுபட்டு, வெளியீட்டைத் தமிழ்கூறும் நல்லுலகத்தே பரவச் செய்யும் பெரியோர் உழைப்புப் போற்றுதற் குரியதே.*

**க. வடிவேலாயுதன், எம். ஏ.,**
*தாம்பரம்.*

---

** முதல்=தலைவர்.*

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை யவர்கள் செந்தமிழ் வீரர் என்பதை நினைந்து நாம் இவ்வமயம் மகிழ்வோமாக. இவரே தெலுங்கும் கன்னடமும் மலையாளமும், தமிழுடன் பிரிக்கமுடியாத உறவுடையன என்பதை மெய்ப்பித்தவர்களின் முன்னணியில் நிற்பவருமாவர். டாக்டர் Rev. G. U. போப் ஐயரவர்கள் மனோன்மணீயத்தை "A Valued Companion one" என்று கூறி அதை வாழ்த்தினர். இத்தகைய நுண்மாண் நுழைபுல மிகுந்த பெருநாவலரை, மறைமலையடிகளாரின் நினைவுவிழாவை அடுத்து வாழ்த்தி வணங்குவது, தமிழருக்கும் உலகுக்கும் பெருஞ்சிறப்பைத் தருவதுமன்றி, மக்கட்கு நல்வழிகாட்டியாயிருப்பதையும் நினைந்து மகிழ்வோமாக. இத்தகைய பண்டைத் தமிழனின் பண்பாடே உலக அமைதிக்கு அடிப்படையாகும் என்பதில் ஐயமுண்டோ! தமிழ் வெல்க!

**டாக்டர், தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை.**
L. C. P. S. L. M. S. S. A. (Lond).

உலகப் பொதுமறை யாத்த வள்ளுவப் பெருந்தகையார், சிலம்புச் செல்வம் தந்த இளங்கோ அடிகளார், சிந்தாமணி அருளிச்செய்த திருத்தக்கர், மேகலை நல்கிய சாத்தனுர், இராமகாதை புனைந்த காவியப் புலவர் கம்பர், பிற அருந்தமிழ்ப் பனுவல்களை இயற்றிச்சென்ற தமிழகச் சான்றோர் ஆகிய தமிழ்ப்பெருமக்களின் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர் நாடகப் பேராசிரியர் மனோன்மணீயம் தந்த மாப்புலவர் சுந்தரம்பிள்ளை ஆவர்.

தமிழறிஞர்கள் ஒன்றுகூடிப் பேராசிரியர் அவர்கள் நினைவு மலர் வெளியிடும் இந் நன்னாளில் இத்தகைய நாடக நூற்களை இயற்றும் முயற்சியினை எடுத்துக்கொள்ள உறுதி கொள்வோமாக!.............. தத்துவம், வரலாறு, தமிழ் ஆகிய துறைகளில் வல்லுநராய்த் திகழும் பேராசிரியர்களின் கட்டுரைகள் அடங்கிய "நினைவு மலர்" தமிழ்ப் பெரு மக்களுக்கு ஓர் நல்விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மாணவர் மன்றத் தலைவர், **மயிலை. சிவ. முத்து**

அந்தம் மிகுந்த சுந்தரம் பிள்ளை
அவர்கள் நினைவினை அவாவுடன் கொண்ட
விழாமலர் அழைப்பிதழ் விருப்புடன் பெற்றேன்;
மகிழ்ச்சி; நன்றி; மனங்குளிர் வாழ்த்து!
தக்கார் காமராஜ் தலைமையில் விழாவும்
தகவுசால் சுப்ரமண் யம்நூல் நுவலவும்
அறிஞர் ஐவர்நூல் அருமை புகலவும்
விரிவுடன் நடக்கும் பெருவிழா வாழ்க!
சுந்தரர் செந்தமிழ் எங்கும் பரவுக
என்றே வாழ்த்தி வணங்குவம் நாளுமே!

புதுக்கோட்டை, **திருவாட்டி. பிருந்தாதேவி.**

முத்தமிழும் தத்துவமும் முறையான ஆராய்வும்
வைத்த பெருநிதியம் வாழியரோ வாழியரோ!

**மு. க. தங்கவேலன், எம். ஏ.,**
அரசினர்கல்லூரி, கும்பகோணம்.

தத்துவ முதிர்ச்சியையும், தித்திக்கும் செந்தமிழையும், ஆற்றொழுக்குப் போன்ற அழகிய நடையினையும், உவமைச் சிறப்பினையும் மனோன்மணீயத்தில் நாம் காணலாம். பழம்பெரும் இலக்கியங்களின் சிறப்பினைக் காட்டும் கலைச் செப்பாகவும், வளர்ந்துவரும் இலக்கியங்களுக்கு வழி காட்டும் கலங்கரை விளக்கமாகவும் இது திகழ்கின்றது.

**பேராசிரியர், ஏ. எஸ். நாராயண பிள்ளை,**
*பல்கலைக் கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.*

சொல்லருந் தத்துவம் வரலா றாராய்ச்சி
துலங்குமுறை ஆய்ந்த தொல்லோன்
வல்லபெரும் புலவரெலாம் வாயார
வாழ்த்தெடுக்க வகுத்த வள்ளல்
நல்லமுறை யிற்றமிழில் மனோன்மணீய
நாடகம் நவிற்று நாவின்
வல்லசுந்த ரப்பேரா சிரியன்வாழ்ந்
தானொருநூற் றாண்டின் முன்னே.

அன்னவன்நூற் றாண்டு விழா
நினை மலரொன் றச்சிட் டகில மெல்லாம்
இன்னமுறை யே முப்பத்திரண்டுபேர்
கட்டுரைகள் இலங்கும் இந்நூல்
சென்னைமுதல் அமைச்சர்திரு காமராசச்
செம்மல்சீர்த் தலைமை தாங்க
மன்னுகலைத் துறையமைச்சர் சுப்பிரமண்
யர்வாழ்த்தி வெளியிட் டாரே.

ஆண்டைம்பத் தேழக்டோ பர்இருபான்
ஒன்பதுசெவ் வாயின் மாலை
ஈண்டுபே ரவைகூட்டு கோதண்ட
பாணிசுப் பையா என்போர்
காண்டகுநற் கலைமன்றம் தமிழ்ச்சங்கம்
சார்பில்செய லாள ராகிப்
பூண்டபுகழ் தமிழ்மக்கள் புகழாகும்
பல்லூழி பொருந்தி வாழி!

**பெருநாவலர், பு. சி. புன்னைவனநாத முதலியார்.**

செங்குட்டுவனும், இளங்கோவும் வாழ்ந்த சேரநாட்டின்கண் செந்தமிழ் மகனாய்த் தோன்றிப் பைந்தமிழ்த்தாய்ச் சிறப்புணர்ந்து வழிபடு கடவுளாய் வணக்கஞ்செய்து நுணுக்கம் நிறைந்த நுவலருஞ் சிறப்பின் காப்பியமாக மனோன்மணீய மென்னும் நாடகநூலை இருமைப் பயனும் விளங்க வரைந்த அண்ணலாம் தத்துவப் பேராசிரியரை இத் தமிழகம் நினைவுகூர்ந்தேத்த முனைந்து முயன்று பலர்புகழ் சிறப்பின் மலரொன் றமைத்து நமது மாநில அமைச்சர் தலைமையில் கல்வியமைச்சர் வெளியீடு செய்யச் செய்யும் தொண்டினைப் பெரிதும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**சி. வேதாசலம்,**
*அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.*

# இரண்டாவது செயற்கைத் திங்கள்

இரண்டாவது தடவையாக ஒரு செயற்கைத் திங்களை உருசியா வெற்றிகரமாகப் பறக்கவிட்டிருக்கிறது. வெளியை வென்று செல்லும் இந்தச் செயற்கைத் திங்களில் ஒரு நாய் பயணம் செய்கிறது. இந்த அற்புதம் கண்டு உலகமே வியக்கிறது. இந்தச் செயற்கைத் திங்கள் உலகத்திலிருந்து 930 கல் தொலைவில் உலகைச் சுற்றுகிறது. 102 நிமிடங்களுக்கு ஒரு முறை உலகத்தை வலம் வருகிறது; இதன் எடை அரை டன் இருக்கும். இதன் வேகம் மணிக்கு 18 ஆயிரம் கல்கள்.

இந்தச் செயற்கைத் திங்களில் ஒரு நாய் பயணம் செய்கிறது. அதற்கு ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறை இருக்கிறது. உணவு வைக்கப்பட்டிருக்கிறது. வெளிவானில் அதன் அங்க அசைவுகள், உயிர் வாழ்க்கைபற்றித் தெரிந்துகொள்வதற்கான இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த இரண்டாவது செயற்கைத் திங்களைப் பறக்கவிட்டதன் மூலம் வெளியில் முன் சென்ற தூரத்தைவிட அதிக தூரத்தில் உள்ள நிலைமைகளை உருசிய விஞ்ஞானிகள் அறிந்துகொள்கிறார்கள். இதிலுள்ள இயந்திரங்கள் எல்லாம் சரிவர இயங்கி வருவதாகத் தெரிகிறது.

முதல் திங்களைவிட இதன் ஒலிக் குறிப்புகள் மிகத் தெளிவாகக் கேட்கின்றன. பிரயாணம் செய்யும் நாய் மிகவும் பத்திரமாக இருக்கும். செயற்கை உணவு இருக்கிறது. அதன் சுவாசம், இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் இவற்றைப்பற்றிய விவரங்களைப் பதிவு செய்யும் இயந்திரங்களும் உள்ளன என்று பேராசிரியர் பிளேகன்ரவோவ் கூறுகிறார்.

இந்த நாயின் பெயர் தம்கா (சின்னஞ்சிறு சீமாட்டி) என்பது. ஏற்கெனவே ராக்கெட்கள் மூலம் பறந்து அனுபவம் பெற்றுள்ளது.

உணவைப் பங்கீடு செய்து சாப்பிட நாய்க்குப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது. உணவு நேரத்திற்கு மணி அடிக்கும். அதோடு இந்த நாய் பாதுகாப்பாக மீண்டும் உலகிற்குத் திரும்பவும் முடியும். எங்கே இறங்குமென்பதை ஒலிக் குறிப்புகள் மூலம் அறிவிக்க முடியும் என்றும், உருசிய பாரசூட்டு மூலம் இறங்கும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இது ஒரு பெரிய சாதனை, நம்ப முடியாத புதுமை என்று கம்யூனிஸ்ட்டல்லாத நாடுகளின் விஞ்ஞானிகள் வியப்புடன் தெரிவித்தனர்.

ஹைட்ரோஜன் குண்டின் பிதா என்று கூறப்படும் அமெரிக்க விஞ்ஞானி டாக்டர் எட்வர்ட் டெல்வர் நவ. 7-ஆந் தேதிக்கு முன் உருசியர்கள் திங்களை எட்டி விடுவார்களானல் அதில் அதிசயமில்லை என்று விஞ்ஞான ஆசிரியர் கூட்டமொன்றில் கூறினர்.

உருசிய விஞ்ஞான வளர்ச்சி நல்ல முறையில் இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று என்று அணுசக்தி ஏஜன்சி தலைவர் அமெரிக்க செனட்டர் கிளிண்டன் ஆண்டர்சன் கூறினர்.

உருசியாவின் முதல் செயற்கைத் திங்களிலிருந்து வெளியாகாத 'ஷ்', 'ஷ்' என்னும் ஒலி உருசியாவின் இரண்டாவது செயற்கைத் திங்களிலிருந்து வெளியாவதாகத் தெரிகிறது. இந்த 'ஷ்' ஒலி புது தில்லியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த 'ஷ்' ஒலி உருசியாவின் இரண்டாவது செயற்கைத் திங்களில் உள்ள நாய் வெளியிடும் ஒலியாக இருக்கலாமோ என்று புது தில்லி வான ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

செயற்கைத் திங்களிலிருந்து எழும்பும் பல்வேறு ஒலிகளின் பொருள்களும் உருசிய விஞ்ஞானிகள் பயன்படுத்தும் குறிகளின் பொருள்கள் தெரிந்தால்தான் விளங்கும் என்று இந்தியப் போக்குவரத்து, செய்தித்துறையின் வானொலித் திட்டத் துணை இயக்குநர் திரு. எம். கே. பாசு கூறினர்.

முதல் செயற்கைத் திங்களைப் போலவே, இரண்டாவது செயற்கைத் திங்களும் மாஸ்கோ வானொலி குறிப்பிடும் இடங்களின் மீது குறிப்பிட்ட நேரங்களில் செல்கிறது.

இன்று பிற்பகல் 3-50 மணிக்கு இரண்டாவது செயற்கைத் திங்கள் புது தில்லிமீது செல்லும் என்று உருசியச் செய்தி நிறுவனம 'டாஸ்' கூறியிருந்தது. அதன்படி பிற்பகல் 3-44 மணியிலிருந்து 3-55 மணிவரை செயற்கைத் திங்களிலிருந்து ஒலிக் குறிப்புகள் கேட்கப்பட்டன.

ஆனந்த் பர்பத் என்னும் இடத்திலுள்ள வானொலி நிலையத்தில் 40.002 மெகாசைக்கிள் 20.005 மெகாசைக்கிள் அளவுகளில் இராப்பகலாக இரண்டாவது செயற்கைத் திங்களின் ஒலிகளைப் பதிவு செய்ய முயற்சி நடந்துகொண்டே இருக்கிறது.

இம் மாதம் 3-ஆம் தேதி பிற்பகலிலிருந்து 40.002 மெகாசைக்கிளில் தொடர்ச்சியாக ஒலிக் குறிப்புகள் கேட்டன. 4-ஆம் தேதி காலையில்தான் 'பீப்' ஒலி நன்ருகக் கேட்டது. அன்று மாலையில் 'பீப்' ஒலி தொடர்ந்த ஒலியாக மாறியது.

---

# ஆட்சியாளர் திரு. வ. சு. அவர்களின்
# மணிவிழா வாழ்த்து

நம் தமிழகத்தில் தோன்றிய நன்மக்களில், தமிழகத்துக்கு ஆக்கமாய் விளங்கி ஒளியளிக்கும் மணிபோல்வார் மிகச் சிலரே! அச் சிலருள்ளும், நம் கழக ஆட்சியாளரவர்கள் ஒருதனிவகையைச் சார்ந்த சிறப்பாளர்! ஆற்றல்வாய்ந்த செம்மணி!

தமிழன்பும் சிவநேயமு மிக்கு, ஆக்கநோக்கமும் அரிய வெற்றியுஞ் சிறந்து, அழுத்தமுந் திருத்தமும் அமைந்து, நன்கு வேரூன்றித் தழைத்து, நாடு முழுதுந் தண்ணிழல் பரப்பித் திகழுங் கூட்டுவாணிப நூற்பதிப்புக் கழகம், உலகுக்கு ஒரு ஞாயிறே போன்று தமிழகத்துக்கு நம் 'சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்' ஒன்றே ஒன்றுதான் என்பது எவரும் அறிந்தது!

இதற்கு விதை வழங்கியவர் நந் தமிழ்ப்பெருங் குரவர் ஆசிரியர் மறைமலையடிகளாரும் ஊன்றி முளைப்பித்தவர் ஆன்ற பெருந்தொண்டர் அவர்மருகர் திருவரங்கனாரு மென்றால், அதனைக் காலமறிந்து நாளும் உழைப்பு நீர் வார்த்து வளம்படத் தழைப்பித்தவர், தழைப்பித்து வருபவர் - அரங்கனார் இளவலார்- உழைப்பின் உருவம், சிக்கனத்தின் சின்னம், உறுதியின் குன்றம், ஒருமையின் திட்பம், ஊக்கத்தின் உறையுள், அறிவின் சுடர், தொழிலின் பொழில், கொள்கையின் வயிரம், ஆட்சியின் கவின்-நம் அருமைக் கழக ஆட்சியாளர், நூற்பதிப்பின் மன்னர், தமிழகத்தின் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களேயாவர்.

தமிழகத்தின் நூற்பதிப்புக்களில் முதன்முதல் அழகு ஏற்றியதும், இலக்கண இலக்கிய சமயநூற்பதிப்புக்களிலும் தொழில் முறையில் ஆக்கங்காணத் திருப்பங் கண்டதும், மக்கள் அறிவுநிலைகளுக்கும் நாட்டின்உணர்ச்சிகளுக்குந் தக்கவாறு நூல்களை இயற்றிக்கொடுத்து இருபக்கமும் ஆக்கமுகம் எழுப்பியதும், தொழிலில் கூட்டுத்திறன், அறிவுத்திறன், விரைவுத் திறன், செயல்திறன் எனப் பலவினைத்திறங்களை இழைத்துப் பெருமைமிகுத்ததும், நம் சித்தாந்த நூற்பதிப்புக் கழகமே என்றால், அதன் பெரும்பங்கு மணிவிழாத் தலைவரவர்கட்கே.

ஆசிரியர் மறைமலையடிகளார் வழிநின்று நாளும் தமிழகத்துக்கு ஆக்கந்தேடும் உறுதிப்பாடுடையவர்களில் நம் விழாத் தலைவர், தலைசிறந்தவர்! அடிகளார் காலத்திலும் பின்னும், தனித் தமிழ் இயக்கத்துக்கு உறுதிச் சுற்றமாய் இயக்கச் சக்கரமாய்ப் படைத்தளபதியாய்த் திகழ்பவர், செயல்படுபவர் இவர்! அடிகளார் கண்ட தனித்தமிழ்ச் சொற்கள், தமிழ் ஆக்கக் குறியீடுகள் அல்லாத, எத்தனையோ பல அழகிய தனித்தமிழ் ஆட்சிகளை நம் பிள்ளையவர்கள் கண்டுள்ளனர்.

ஆசிரியாடிகளின் நூற்பதிப்பு நூல்நிலைய அமைப்பு கல்லூரி யமைப்பு முதலிய நன்னினைவுகளைச், செயற்படுத்தி நிறைவேற்றிப் பயன் கனிவிக்கும் முயற்சிகளும் உடையவர் இவர்!

இணையற்ற உழைப்பும், அவ்வுழைப்பின் ஒவ்வோரணுவிலும் நிகரற்ற அறிவும், அவ்வறிவின் ஒவ்வொரு பகுதியிலும் செறிவுற்ற ஆக்கமும் உடையவர் இவ்வாட்சியாளர்! உலகியல் அறிவும், அதுவே நேரத்தில் அறிவியல் உள்ளமும், அருள் அடிப்படையும் வியத்தகு முறையில் வாய்ந்தவர்! அப்படியே, மிகு விரைவிற் பிறரையும் பழக்கி உயர்த்திச் செயற்படுத்தும், புகழ்ப்படுத்தும், பேராற்றலும் மிக்கவர்! மொழிப் புலமை மட்டும் உடைய தமிழறிஞர் பலரை, நாட்டுக்குப் பயன்படத் திருப்பியும், மூலையிற் கிடந்தோரை முற்றங் கொணர்ந்து இயக்கியும் ஒளி விளக்குகளாக்கிய ஊற்றமும் உடையவர்!

ஏனையெல்லாச் செயல்முறைகளையுமவிட நூற்பதிப்பு முறை, கருத்துக்களை நாட்டிற் பரவலாகவும் நீளவும் பரவச் செய்யுந்திறன் அமைந்ததாகலின், அத் துறையைக், கொள்கைக் கடைப்பிடியும் செய்கைத்திறனமைவுங் கொண்ட இவர் ஏற்று உறுதிப்பணி இயற்றி வருதலால், தமிழகத்தின் ஆக்கநோக்கங்கட்கு இவரனையோர் பெருவாழ்வு இன்றியமையாததாகின்றது. தமிழகம் இவ் விறுவிறுப்பமைந்த ஆடவர் தலைவரின வாயிலாக எத்தனையோ ஆக்க நோக்கங்களை எதிர் நோக்கிக்கொண்டிருக்கின்றது! வாழ்க்கை வீரராகிய இவரது நல்வாழ்வுக்கு நாடு மகிழ்ச்சி முகங்கொண்டு வாழ்த்துகின்றது!

வாழ்க்கையில் அறுபதாம் ஆண்டின் நிறைவுவிழா, அன்பு கலந்த உழைப்பின் மணிமுடியாட்சியை நினைவுறுத்தும்; இனி, யாவர் நலத்துங் கருத்தமைந்த அருள்கலந்த செய்கையின் தண்ணிலா வாழ்க்கையில் நாட்கள் நடக்க வேண்டும்.

திருமிக்க வ. சுப்பையா பிள்ளையவர்களுக்கு மாம்பாக்கம் குருகுலம் பல்லாண்டு கூறுகின்றது. பள்ளிச் சிறுவர் இருநூற்றுவரும், இல்லச் சிறுவர் நாற்பதின்மரும், ஆர்வலர் அன்பர் மாணவர் ஆயிரவரும், திரு. பிள்ளையவர்களின் வீர வாழ்வுக்கு, வெற்றி வாழ்வுக்கு, மணிநிலா வாழ்வுக்குப் பல்லாண்டு பல்லாண்டு இசைக்கின்றனர்.

பாலியாற்றின் நன்மணல் பலவினும் இந் நூற்பதிப்பு வீரர் வாழ்நாட்கள் ஊற்றம் மிகுகவென அனைவேம் உள்ளமும் இம் மணிவிழாநாளில் திருவருளைப் பரவி இறைஞ்சுகின்றது! வாழி வ. சு.! வெல்க அவர் இல்லம்! போற்றி கழகத் தொண்டுகள்!

குருகுலம், மாம்பாக்கம்;
22—9—57.

இளவழகன்.

# பாட்டைச் சிதைப்பது பண்பாகுமா?

[பண்டித, வித்வான், தி. சங்குப்புலவர்.]

## முன்னுரை

செந்தமிழ் நாட்டுச் செல்வர்களே! நமது தாய்மொழி சிறந்தது; உயர் தனிச் செம்மொழி; இலக்கணவரம்புடையது: சொற்சுவை பொருட்சுவை தருவது என்றெல்லாம் மேடையில் ஏறிப் பேசுகின்ற தமிழரிற் பலர் நம்மொழியிற் பாடிய செய்யுளைச் சிதைக்கப் பையப்பையப் பழகினர்: வரையறையின்றி வடிவைக் குலைத்தனர். ஒவ்வொரு சொல்லாகத் தனித்தனி பிரித்துப்போடவும் துணிந்துவிட்டனர். வள்ளுவன், கம்பன், இளங்கோ முதலிய தெய்வப்புலவர் செய்யுட்களும், தேவாரம் திருவாசகம், திருவாய்மொழி முதலிய இசைப்பாடல்களும் இவர்கள் கையிற் சிக்கிப் படாதபாடுபடுகின்றன. இவற்றைப் பாடிய நூலாசிரியர்கள் கண்டாற் பொறுப்பார்களா? ஏன் சிதைக்கின்றீர் என்று கேட்டால் விடை என்ன கூறுவர்? அவரவர் பாட்டை அவரவர் சிதைத்தாலும் "உரிமையாற் சிதைத்தேன்" என விடை கூறலாம். அயலார் பாட்டை யழிப்பதற்கு இவர்கட்கு என்ன உரிமை? பாடிக்கொடுத்த படிவத்துடன் வைத்துப் பொன்போற் போற்றிப் படித்துப் பயன்பெறுவது தானே சிறந்தது. பாட்டின் அருமை அதனை யமைத்த புலவனுக்குத் தானே தெரியும்! சொற்களை யடுக்குமுறையில் அடுக்கிப் புணர்ச்சி விதிப்படி கூட்டிச் சீர், தளை, அடி, தொடை, ஓசை யமைத்துப் பாடுவது எவ்வளவு அருமையான செயல்! சிதைப்பது எவ்வளவு எளிமையான செயல்! பாண்டங்களை வனையும் குயவனுக்குப் பலநாள் வேலை! உடைத்து நொறுக்கும் ஒருவனுக்கு ஒரு நொடி வேலை! என்ற பழமொழி நாம் அறிந்தவொன்று. அருமையாகப்பாடிய பாடல்களையெல்லாம் உருவைக் குலைத்துச் சீரைக்கெடுத்துத் தளையைத் தவிர்த்து அடியை யகற்றித் தொடையைத்தொலைத்து ஓசையை ஒழித்து வறிதே சொற்களை நிற்கும்படி செய்தனர்! என்னே இவரது மதிநுட்பம்! எல்லாரும் எளிதிற் படித்துப்பொருள் காணுமாறு சீர்கெடாமலும், ஓசைகெடாமலும் சிலர் பிரித்துப் பதிக்க முதலில் தொடங்கினர். அது நல்ல நோக்கம்தான் என்று சில அறிஞர்கள் உடன்பட்டனர். பதிப்பாசிரியர்கள் மலிவுப் பதிப்புக்கள் பல வெளியிட்டனர். வரவேற்குமுறையிற் சில நூல்கள் சீர்கெடாமற் பிரிக்கப்பட்டிருந்தன. புதுமுறை இது எனப் போற்றினர் பலரும். அதனாற் கைதேர்ந்தவர் ஆயினர். இந்நாள் இப்போது வெளிவந்திருக்கும்

தமிழ்நூல் மலிவுப்பதிப்பை வாங்கிப் பாருங்கள். துண்டுதுண்டாகச் சொற்கள் நிற்கக் கண்டு கண்டுள்ளம் களிப்படைவீர்கள். அடியா, சீரா, தளையா, தொடையா, எதுகையா, மோனையா எதுவும் காண இயலாது. இத்துணைச்சீர் இன்னபாட்டுஇது என்று ஆய்ந்தறிவதற்கும் ஒரு வழியில்லை. அட்டையில் ஓவியம் அழகு வாய்ந்தது; கட்டடம் கண்ணைக்கவரும் வகையிற் புத்தக வடிவமாய் விற்பதற்கென்று வெளியிட்டுள்ளார். இருக்க இடங் கொடுத்தாற் படுக்க இடங்கேட்கும் பான்மைபோல முதலிற் பிரிக்கச் சிலர் இடங்கொடுத்தது மொழியைக் கெடுக்க முதற் காரணமாயிற்று. இனி இவ்வாறு நாம் இடங்கொடுத்தால் மொழியின் இலக்கணத்தின் அருமையும் கெட்டு வழக்கும் ஒழிந்துவிடும். இலக்கண வரம்பில்லாத எந்த மொழியும் விரைவில் அழிவது வெள்ளிடைமலையே. இலக்கண வரம்பினாலன்றோ நம் மொழி இத்துணைக் காலமும் நிலைத்து நிற்கின்றது. முன்னோர் செய்யுளைப் பொன்னேபோலப் போற்றிப் படித்துப் பொருள் காணவேண்டும். பாட்டைக் கெடுப்பது பண்பாகுமா? உரைநடை நூல்களையும் ஒருமுறையாக இலக்கண வழுவின்றி எழுதிப் படிக்க எண்ணவேண்டும்; அதுதான் சிறந்தது.

## பிரிப்பதால் விளையும் கேடு

எப்படிப் பதித்தால் நமக்கென்ன? தமிழ்மொழி தானே வழங்கும் எனச் சிலர் எண்ணலாம். பிரிப்பதால் விளையும் கேடுகள் பல. ஒரு மேற்கோள் காட்டி விளக்குகின்றேன். வள்ளுவர் பாடிய திருக்குறளில் "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள." என்ற குறளை, 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐந்து புலனும் ஒண்மை தொடி கண் ஏ உள' எனப் பிரித்துப் பதித்து விடுகிறார் ஓர் பதிப்பாசிரியர். மற்றொரு புதுப் புலவர் அதனைக் காண்கிறார்? இலக்கணம் கற்றவர் இவர். குறள் வெண்பாவிற்கு எத்தனை சீர்? ஆசிரியத்தளை வெண்பாவில் வருமா? எதுகை எங்கே? புணர்ச்சி விதிப்படி பொருத்தப்படவில்லையே? வள்ளுவர்க்கு இலக்கணம் தெரியாதா? அவர் பாடிய குறள்தானா? சில பாடல் வழுவின்றிப் பாடியிருக்கின்றனரே! இதுமட்டும் ஏன் இவ்வாறு பாடினார்? என்று ஆய்ந்து உண்மைகாண முடியாமல் விழிப்பார்; வள்ளுவரையும் பழிப்பார். பின்பு ஆய்ந்து இலக்கணப்படி புணர்த்து இடர்ப்பட்டுக் குறள் எனத் துணிவர். பிரிக்கவும் இலக்கணங் கற்றவர் ஒருவர் வேண்டும். பொருத்தவும் இலக்கணங் கற்றவர் ஒருவர் வேண்டும். புலவர்கட்கு வேலை இதுவா? புலவராயிருந்தாற் பொருத்திப் படிக்கின்றார். மற்றையோர் எவ்வாறு படிப்பார்? பாட்டைச் சிதைத்தால் அதனை

இன்ன பாட்டு எனக் காண்பது எப்படி? இசையறுத்துப் படிப்பது எப்படி? வரையறையில்லை யெனில் யாவரும் பாட்டுப் பாடலாமன்றோ? இலக்கண வரம்பு இல்லாமற் பாடுவது பாட்டாகுமா? ஐந்திலக்கணமும் கற்றாலன்றோ பாட்டுப்பாடவியலும்? வரம்பில்லாமற் சொற்களை வரைந்து காட்டி ஒருவன் "நான் பாடியிருக்கிறேன்" என்றால் அதனையும் அரங்கேற்ற வேண்டு மல்லவா? "வாயைக் கோணவைத்தாற் பாட்டு, காலைக் கோண வைத்தால் ஆட்டு" என்ற பழமொழிபோலத் தமிழ்நாட்டில் எல்லாம் பாட்டாக வெளிவருமே; இலக்கணங்களை யெல்லாம் எடுத்தெறிந்துவிட்டுச் சொற்களைச் சேர்க்கப் பயின்றாற் போதுமே; இலக்கணங்களைக் கற்று இடர்ப்படுவது ஏன்? பள்ளி மாணவர்கட்குப் பயிற்றவேண்டுமா இலக்கணம்? ஒருமை பன்மை தெரியவேண்டுமா? புணர்ச்சி விதி தெரியவேண்டுமா? பெயர், வினை, தெரிய வேண்டுமா? வெண்பா, அகவல், கலி, வஞ்சி என்ற பாவும் இனமும் தெரியவேண்டுமா? சீர்தளை தெரியவேண்டுமா? ஒன்றும் வேண்டா என்ற முடிவுக்கு வந்துவிடலாம். இலக்கண நூல்கள் எல்லாவற்றையும் கிழித்துக் குப்பைத் தொட்டியிற் போட்டுவிடலாம். போற்றிவைத்துப் பொருள் காணவேண்டுமா? மொழியிலக்கணம் இளைஞர் கற்கவேண்டுமா? இன்னவிதமாகத் தான் எழுதவேண்டும்; இன்னவிதமாகத்தான் பாடவேண்டும் என்ற இலக்கண வரம்பில்லாதபோது மொழியும் ஒழியும் அன்றோ? மொழிக்கு வரும் கேட்டை ஒழிக்கத்தான் நாம் முயலவேண்டும்.

## செய்யுளைச் சிதையாது பதிப்பதற்குரிய முறைகள்

நமது நாட்டு மொழியிலுள்ள நூல்களையெல்லாம் கல்லாதவரும் கற்றவரும் வாங்கிப் படித்துப் பொருள் உணர்ந்து பயன் அடைவதற்குரிய வழி என்ன? என நீங்கள் வினவலாம். கூறுகின்றேன் விடை. கல்லாதவர்கள் நூல்களை வாங்கிக் கற்றுப் பயன்பெற முடியாது. அவர்கள் தம் பக்கத்திற் கற்றவர்களை வைத்து அவர்கள் படித்துப் பொருள் கூறக் கேட்டுத்தான் பயனடையவேண்டும். வேறு வழியில்லை. எந்தப் புத்தகத்தையும் கல்லாதவர்கள் பொருளிருந்தால் வாங்கிவைக்கலாம். செய்யுளைச் சிதைத்துப் பதித்த புத்தகமாயிருந்தால் என்ன? சிதையாது பதித்த புத்தகமாயிருந்தால் என்ன? கற்றவர்களுக்குத் தாம் புத்தகங்கள் பயன்படும். முதல், இடை, கடை என மூன்று பிரிவினர் மொழிப்புலவர். முதல்வர்க்குச் செய்யுள் வடிவம் சிதையாதிருப்பது வேண்டும். நடுவருக்குச் சொற்களைப் பிரித்துக் கொண்டுகூட்டிச் சில குறிப்பு வரைந்திருந்தாற் போதும். மூன்றாம் நிலைப் புலவருக்கோ சொற்பொருள் கருத்

துரை விளக்கவுரை எல்லாம் வரைந்து எளிதாய்ப் பொருள் காணும் வகையில் இருக்கவேண்டும். எனவே மூன்றுவகையான பதிப்புப் புத்தகங்கள் அச்சகங்களில் இருக்கவேண்டும். செய்யுள் நூலுக்கு மட்டும்தான் இம்முறை. உரைநடை நூல்களை அப்படியே பதிக்கவேண்டும் என்பது தெரிந்ததே. செய்யுள் நூல் (1) செய்யுள் வடிவஞ் சிதையாமலே யிருக்கவேண்டும். (2) செய்யுள் மேலேயிருக்கக் கீழே கொண்டுகூட்டிச் சொற்களைப் பிரித்துக் காட்டிக் குறிப்பு வரைந்திருக்கவேண்டும். (3) செய்யுள் வரைந்து கொண்டு கூட்டிச் சீர்பிரித்துக் காட்டிக் குறிப்பு வரைந்து பின்னர் அதற்குச் சொற்பொருள் கருத்துரை விளக்கவுரை வரைந்திருக்கவேண்டும். இம்மூன்று வகையாகப் புத்தகங்கள் வெளிவந்தால் யார் யார்க்கு எவ்வெப் புத்தகங்கள் வேண்டுமோ வாங்கிக்கொள்வார்கள். ஆய்ந்து ஆவன செய்க.

## வேண்டுகோள்

மேற்குறித்தவாறு சிதையாது பதிப்பதற்குரிய முறைகளையும் சிதைத்தால் விளையும் கேட்டினையும் ஆராய்ந்து செய்யுள் நூல்களைப் புணர்ச்சி விதிப்படி வரைந்து புலவர்கள் யாவரும் புத்தகமாக வெளியிடவேண்டுகிறேன். அச்சகத் தலைவர்களும் பதிப்பாசிரியர்களும் கழிவிரக்கம் கொள்ளாது புதிய முறையைத் தமிழ்நாட்டிற் புகுத்தி இம்முறையே பதித்து மொழியின் சிறப்பைக் குன்றின்மேலிட்ட விளக்கென என்றும் விளங்கச் செய்யுமாறு வேண்டுகிறேன். கற்றோரவையில் இலக்கண வரம்பில்லாத செய்யுள் நூல்கள் வந்தால் அரங்கேறுவண்ணம் தடுக்கவும் வேண்டுகிறேன்.

## முடிவுரை

மொழிப் புலவர்களே! மொழிப் பற்றுடையவர்களே! முன் வருக. மொழிக்குவரும் கேட்டை முன் அறிந்து காக்கவேண்டுவது நமது கடமையாகும். செய்யுளைச் சிதைப்பது நீடித்திருந்தால் மொழி வழக்காறற்றுப் பெருமையும் அருமையும் இன்றி அழிந்துபோகும் என்பது கண்டோம். எல்லாரும் கூடி ஒத்துழைத்தால் எளிதிற் பயன்காணலாம். கழகம், மன்றம், சங்கம் ஆகிய இடங்களிலிருக்கும் புலவர்கள் யாவரும் அவை கூட்டிப் பேசி முடிவை அரசியலார்க்கும் தெரிவிக்கலாம். அரசியலாரையும் இதில் ஒத்துழைக்கும்படி வேண்டுவோம். கிளர்ச்சி செய்து செய்யுளைப் பிரித்துப் போட்ட புத்தகங்களை வாங்கக் கூடாதெனத் தடுப்போம். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்நாடு!

---

# சேக்கிழார் புராணநடை

[திரு. ச. கணபதி முதலியார், எம்.ஏ., எல்.டி.]

(செல்வி. சிலம்பு ௩௨, பரல் ௨, ௧௦௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேக்கிழார் புராணம் பாட வடமொழித் துணையை ஒரு சிறிதும் நாடினாரல்லர். தம் முன்னோர் பாடிய தனித்தமிழ் நூல்களையே தேடிப் பெற்றார். சுந்தரர் யாத்துத் தந்த திருத்தொண்டத் தொகையே தமது புராணத்திற்கு முதனூலாயிற்று; தொகை நூலாயிற்று. திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் அருளைப் பெற்றுப் பாடிய நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியே வழி நூலாயிற்று; வகைநூலாயிற்று. இவ்விரண்டு நூற்களையும் அடிப்படையாகக் கொண்டு அம்பலக் கூத்தனின் 'உலகெலாம்' என்ற சொற்றொடரை முதலாக வைத்து அருள் வாணிபம் உஞற்றத் தாம் பாடிய பெரியபுராணம் சார்புநூலாயிற்று, விரிநூலாயிற்று. தனி அடியார் அறுபத்து மூவரைப்பற்றியும், தொகையடியார் ஒன்பதின்மரைப்பற்றியும் விரித்துரைக்க வந்த அருள் ஆசிரியர் பொருள் சேர்க்கும் முறையில் தொகை, வகை நூற்களை அடியொற்றியே, பினபற்றியே வரலாறுகளை அமைப்பாராயினர். 'திருத்தொண்டத்தொகை' என்ற முதல்நூல் பெயரை ஒட்டியே தமது நூலுக்கும் 'திருத்தொண்டர் புராணம்' எனப் பெயர் கொடுத்தார். திருத்தொண்டத்தொகை எனும் சுந்தரர் திருப்பதிகம் பதினொரு திருப்பாடல்களைக் கொண்டு மிளிர்வது. சேக்கிழாரும் தமது புராணத்தைப் பதினொரு சருக்கங்களாகப் பாகுபாடு செய்து கொண்டார். பெரியபுராணத்தின் ஒவ்வொரு சருக்கமும் திருத்தொண்டத்தொகை ஒவ்வொரு பாட்டின் முதலடியையாதல் முதற் சொற்றொடரையாதல் தலைப்பெயராக, அங்கமாக ஏற்று நிற்கும். திருமலைச்சருக்கம், வெள்ளானைச் சருக்கம் என்ற இரு சருக்கங்களும் பெரியபுராணம் சுந்தரர் புராணமாதலால் சுந்தரரின் வரலாற்றை முற்றிலும் கூறுமாற்றால் ஆதியுமந்தமுமாக, (முதலும் கடையுமாக) ஆசிரியரால் இணைக்கப் பெற்றுள்ளன. திருத்தொண்டத் தொகையில் இவ்விரு சருக்கங்களுக்கும் இடங் கிடையா. பெரியபுராணம் பதின்மூன்று சருக்கங்களாகப் பிரிக்கப்படினும் திருத்தொண்டத்தொகை பதினொரு பாசுரங்களால் ஆக்கப்பெற்றதுபோல பதினொரு சருக்கங்களாகவே பாகுபாடு செய்யப்பட்டுள்ளது எனக் கோடலே ஏற்புடைத்து. தில்லைவாழ் அந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், மும்மையாலுலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம், வம்பறா வரிவண்டுச் சருக்கம், வார்கொண்ட வனமுலையாள் சருக்கம், பொய்யடிமை

யில்லாத புலவர் சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல்சூழ்ந்த சருக்கம், பத்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னியசீர்ச் சருக்கம் என்பவையே அவை.

நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதி தில்லைவாழ் அந்தணர் முதலாக நூற்பயன்கூறும் செய்யுள் ஈறாக எண்பத்தொன்பது செய்யுட்களைத் தன்னகத்தே கொண்டது.

அவற்றுள்,

"கூட்டமொன் பானொ டறுபத்து மூன்று தனிப்பெயரா
வீட்டும் பெருந்தவத் தோரெழு பத்திரண் டாம்வினையை
வாட்டுந் தவத்திருத் தொண்டத் தொகைபதி னொன்றின்வகைப்
பாட்டுந் திகழ்திரு நாவலூ ராளி பணித்தனனே."

என்ற அஎ-வது செய்யுள் திருத்தொண்டத் தொகையிலுள்ள கூட்டவடியார்கள் தனியடியார்களின் தொகையைப் பற்றிக் கூறும்.

"பணித்தநற் றொண்டத் தொகைமுத றில்லை யிலைமலிந்த
வணித்திகழ் மும்மை திருநின்ற வம்பரு வார்கொண்டசீ
ரிணைத்தநற் பொய்யடி மைகறைக் கண்டன் கடல்சூழ்ந்தபின்
மணித்திகழ் சொற்பத்தர் மன்னிய சீர்மறை நாவனொடே."

என்ற அஅ-வது செய்யுள் திருத்தொண்டத் தொகைப் பதிகக் கவிகளின் முதற் குறிப்பை இயம்பும் பயன் கூறும் கடைச் செய்யுள். இவை நீங்கலாகவுள்ள அசு செய்யுட்களும் மெய்யடியார்களின் வரலாறுகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பான்மையன. அவ்வெண்பத்தாறு பாடல்களுள் சுந்தரரைப் பற்றிய பாடல்கள் பதினொன்று. இப் பதினொரு பாடல்களையும் நம்பிகள் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சங்கிலித்தொடர்போல் இடைவிடாமல் இணைத்துப் பாடினாரல்லர். திருத்தொண்டத் தொகையின் ஒவ்வொரு பாசுரத்தினும் சொல்லப்பட்டுள்ள அடியார்களைப் பற்றிக் கூறி முடித்த பின்னர் ஒவ்வொரு செய்யுளில் சுந்தரரை வாழ்த்திப்போதல் நம்பிகள் கொண்ட முறை. அங்ஙனம் சுந்தரரைப் பற்றி அந்தாதியில் எழுந்த செய்யுட்களின் எண்கள் அ, கசு, உந, ௩௨, ச0, சஅ, ருஎ, சுந, சுகூ, எஎ, அசு என்பன. இம்மரபினையே நமது சேக்கிழார் பெருமானும் பெரியபுராண வரலாற்றுப் பொருள்போக்கு நெறியில் பின்பற்றியுள்ளார். ஒவ்வொரு சருக்க இறுதிப் பாட்டும் ஆரூரரை வணங்கிப் போகும் நெறியில் புராணத்தை அமைத்துள்ளமை சேக்கிழார் எங்ஙனம் தொகை, வகை நூல்களை உச்சிமேல் நனிகொண்டு விரிநூலை விதந்தோதியுள்ளார் என்பதை அங்கைநெல்லியென எடுத்துக்காட்டும். சுந்தரரை வாழ்த்தும் சேக்கிழார் பாடல்களும்

பதினொன்றே. திருத்தொண்டத் தொகையின் பதினொரு பாசுரங்களின் முதலடிகள், சேக்கிழாரின் பதினொரு சருக்கத் தலைப்புகள், ஒவ்வொரு சருக்கத்திலும் கூறப்பெற்றுள்ள தனி அடியார்கள், தொகை அடியார்கள், நம்பிகள் அந்தாதியில் ஆரூரரைப் பாடிய பாடல்களின் முதலடிகள், சேக்கிழார் சுந்தரரைப் பாடிய பாடல்களின் முதலடிகள் முதலியவைகளைக் காட்டும் பின்வரும் அட்டவணையை மனத்துள் கொண்மின்.

1. திருமலைச் சருக்கம்

2. 'தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்' (தில்லைவா ழந்தணர் சருக்கம்)

(1) (தில்லைவாழந்தணர் புராணம்) திருநீலகண்டர், இயற்பகை, இளையான்குடிமாறர், மெய்ப்பொருள், விறன்மிண்டர், அமர்நீதியார். 6

'தொழுதும் வணங்கியும்' செ. 8

'மலர்மிசை அயனும் மாலும்' அமர்நீதி-செ. 49

3. 'இலைமலிந்தவேல் நம்பியெறி பத்தர்க்கடியேன்' (இலைமலிந்த சருக்கம்)

எறிபத்தர், ஏனாதிநாதர், கண்ணப்பர், குங்குலியக்கலயர், மானக் கஞ்சாறர், அரிவாட்டாயர், ஆனாயர். 7

'அருட்டுறை யத்தற்கு' செ. 16

'தீதுகொள் வினைக்கு' ஆனாயர்-செ. 42

4. 'மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்' (மும்மையால் உலகாண்ட சருக்கம்)

மூர்த்திநாயனார், முருகநாயனார், உருத்திரபசுபதி, திருநாளைப் போவார், திருக்குறிப்புத்தொண்டர், சண்டேசுரர். 6

'நிதியார் துருத்தி' செ. 23

'நேசம் நிறைந்த உள்ளத்தால்' சண்டேசுரர்-செ. 60

5. 'திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக் கரையன்' (திருநின்ற சருக்கம்)

திருநாவுக்கரசு சுவாமிகள், குலச்சிறையார், பெருமிழலைக் குறும்பர், காரைக்காலம்மையார், அப்பூதி அடிகளார், திருநீலநக்கநாயனார், நமிநந்தியடிகளார். 7

'நந்திக்கு நம்பெருமாற்கு' செ. 32

'நாட்டார் அறிய' நமிநந்தி-செ. 33

6. 'வம்பறா வரிவண்டு மணநாறமலரு மதுமலர் நற்கொன்றை யான்' (வம்பறாவரிவண்டுச் சருக்கம்)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், ஏயர்கோன்கலிக்காமர், திருமூலர், தண்டியடிகளார், மூர்க்க நாயனார், சோமாசிமாறர். 6

'துணையுமளவு மில்லாதவன்' செ. 40

'பணையுந் தடமும் புடைசூழும்' சோமாசிமாறர்-செ. 6

7. 'வார்கொண்ட வனமுலையா ளுமை பங்கன்' (வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்)

சாக்கியநாயனார், சிறப்புலிநாயனார், சிறுத்தொண்டர், கழறிற்றறிவார், கணநாதர், கூற்றுவ நாயனார். 6

'கூற்றுக் கெவனே புகல்' செ. 48

'தேனுங் குழலும் பிழைத்த' கூற்றுவநாயனார்-செ. 9

8. 'பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்' (பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம்)

(1) பொய்யடிமையில்லாத புலவர், புகழ்ச்சோழ நாயனார், நரசிங்க முனையரையர், அதிபத்தர், கலிக்கம்பர், கலிய நாயனார், சத்திநாயனார், ஐயடிகள் காடவர்கோன். 7

'பல்லவை செங்கதிரோனை' செ. 57

'உளத்திலொரு துளக்கமிலோம்' ஐயடிகாடவர்கோன்-செ. 9

9. 'கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த கணம் புல்லநம்பி' (கறைக்கண்டன் சருக்கம்)

கணம்புல்லர், காரி நாயனார், நின்றசீர்நெடுமாற நாயனார், வாயிலார் நாயனார், கோட்புலிநாயனார். 5

'கொடுத்தான் முதலைகோள் பிள்ளைக்குயிர்' செ. 63

'செறியுண் டென்று' முனையடுவார்-செ. 7

10. 'கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்' (கடல் சூழ்ந்த சருக்கம்)

கழற்சிங்க நாயனார், இடங்கழி நாயனார், செருத்துணை நாயனார், புகழ்த்துணை நாயனார், கோட்புலி நாயனார். 5

'தருமகட் பேசினேன்' செ. 69

'மேவரிய பெருந்தவம் யான்' கோட்புலி-செ. 13

11. 'பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்' (பத்தராய்ப் பணிவார் சருக்கம்)

(1) பத்தராய்ப் பணிவார், (2) பரமனையே பாடுவார், (3) சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், (4) திருவாரூர்ப் பிறந்தார், (5) முப்போதும் திருமேனி தீண்டுவார், (6) முழுநீறு பூசிய முனிவர், (7) அப்பாலும் அடிசார்ந்தார். 7

'செழுநீர்வயல் முதுகுன் றினில் செந்தமிழ்பாடி' செ. 77

'செற்றார்தம் புரமெரித்த' அப்பாலும் அடிசார்ந்தார்-செ. 2

12. 'மன்னிய சீர்மறை நாவ னின்றவூர்ப் பூசல்' (மன்னியசீர் சருக்கம்)

பூசலார் நாயனார், மங்கையர்க்கரசியார், நேச நாயனார், கோச்செங்கட் சோழ நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், சடைய நாயனார், இசை ஞானியார். 7

'ஞானவா ரூரரைச் சேரரை' செ. 86

'ஒழியாப் பெருமைச் சடையனார்' இசைஞானியார்-செ. 1

13. வெள்ளானைச் சருக்கம்

| | | |
|---|---|---|
| தனியடியார்கள் | 62+1 (சுந்தரர்) | 63 |
| தொகையடியார் | 1+1+7 | 9 |
| | | 72 |

திருத்தொண்டர் புராணம் சரித்திரச் சான்றுகளோடு எழுதப்பெற்ற தண்டமிழ்நூல்; அஃது கட்டுக்கதையல்ல; பொய்க்கதையல்ல; சேக்கிழாரது கற்பனைத் திறத்தின் விளைவாய், சிந்தனைசக்தியின் உறுபயனாய்ப் படைத்து மொழியப்பட்ட வரலாற்று நூலல்ல. (Figment of His Imagiunation); சேக்கிழார் அநபாயற்கு உழை இருந்து இடித்துக்கூறும் மந்திரிக் கிழமை பூண்டு ஒழுகும் மாண்புடை அருட் செல்வராகலின் சென்ற இடமெல்லாம் சிறப்பெய்தப் பெற்றார். அடியார்களின் உண்மை வரலாறுகளை எல்லாம் ஆங்காங்கு முதியோர்கள்பால் உசாவி அறிந்தே எழுதினர். அன்றியும் பல கோயில்கள் புக்கு ஆண்டுச் சுவர்களிலும் கற்றூண்களிலும் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளையும் ஐயந்திரிபறப் படித்துணர்ந்தார்; மெய்க் கீர்த்திகளும் அவர்க்குத் துணைபுரிந்தன. இன்னணம் ஈட்டிய வரலாற்றுக் குறிப்புக்களோடு மூவர் முதலிகள் திருவாய் மலர்ந்தருளிய திருநெறித் தமிழாகிய தேவாரத் திருப்பாடல்களையும் பெரியபுராணக் கட்டிடத்திற்கு அடிப்படைக் கற்களாகக்கொண்டார். சேக்கிழார் தேவாரப் பாடல்களை எண்ணிப் படித்து, மாந்திக்களித்து இறுமாந்திருந்ததுபோல் வேறெவரும் இருந்திருக்க இயலாது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் தமிழ் சேக்கிழார்க்கு மூலமந்திரம். அம் மூவர் வரலாறுகளை விதந்தோதுங்கால் தேவாரம் பாடப்பெற்ற இடங்களையும், அப் பதிகங்களின் சிறப்பியல்புகளையும் ஆங்காங்கே சுட்டியே செல்லுவார். இதுவும் சேக்கிழாரின் பொருள் போக்கு நெறியில் ஒன்றும். தேவாரம் ஓர் தங்கப்பேழை. அதனுள் அடங்கிக் கிடப்பன மூவர் திருவாக்குகளினின்றும் உதிர்ந்த முத்துக்களும், வைரங்களும், வைடூரியங்களும், கோமேதகங்களுமேயாகும். உட்கிடக்கும் நவமணிகளைப் பயன்படுத்த அப் பொற்பெட்டி திறக்கப்படுதல் வேண்டும்; திறத்தற்கு நற்சாவியும் வேண்டற்பாலது. சேக்கிழார் திருவாய் மலர்ந்தருளிய பெரியபுராணமே திறத்தற்காம் பொற்சாவி. மூவரும் பல தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்ட சிவநெறிச் செல்வர்கள். ஒரு தலத்திற்கே பல பாடல்கள் ஒரு நாயனார் பாடியதுண்டு. அப்பாடல், எப்பொழுது, எச்சந்தர்ப்பத்தில் பாடப்பெற்றது என்பதனைத் தேவாரம் படித்தலை மாத்திரம்கொண்டு அறிய இயலாது. இங்ஙனம் மயங்கி நிற்புழி, மயக்கந் தீர்க்கும் நன்மருந்தாகப் பெரிய புராணம் உற்றுழி வந்து உதவும் சேக்கிழாரும் நோய்நாடி நோய் முதல் நாடி அது தீர்க்கும் வாய் நாடி வாய்ப்ப மருந்தளிக்கும் நல் மருத்துவராய்க் காட்சி அளிப்பர். அவரே இவ்வமயத்தில், இவ்விடத்தில், இக்காரணத்தால் இப்பாட்டு இங்ஙனே பாடப் பெற்றது என்று எடுத்துக்காட்டுவர். எனவேதான் அவரது

புராணம் தேவாரத்தை மயலற உணர ஓர் தகுந்த வழிகாட்டியாகும். இவ்வுண்மையைச் சில சான்றுகள் காட்டி வலியுறுத்துவல்.

கோளறு பதிகம், திருநீற்றுப் பதிகம், திருஏடு எரியிலிட்ட பதிகம், (பச்சைப்பதிகம்) திருப்பாசுரம், திருநீலகண்டப் பதிகம், பஞ்சாக்கரப் பதிகம், நமச்சிவாயப் பதிகம் முதலியன சம்பந்தரால் எவ்வெவ்விடங்களில் முறையே பாடப்பட்டன என்பதை அறியச் சேக்கிழாரது பெரியபுராணந்தான் வழிகாட்டக்கூடுமே யல்லது வேறொரு புராணமுமல்ல என்பது எஞ்ஞான்றும் சைவச் சார்புடையார்க்கு வெள்ளிடைமலை. ஐந்தெழுத்துப் பொறிக்கப் பெற்ற பொற்றாளம் பெற்ற ஞான்று யாத்தபதிகம் யாது என்பதற்கும், முத்துப்பந்தல், முத்துச் சிவிகை முதலியன பெற்றுக் கொண்ட காலத்துப் பாடிய பதிகம் யாது என்பதற்கும், திருமறைக்காட்டு மணாளனை உரிய நேர்வாயில் மூலம் கண்டுகளிக்கக் கதவந் திறக்கவும் அடைக்கவும் பாடிய பதிகங்கள் யாவை என்பதற்கும், திருவீழி மிழலையில் பொற்காசு பெறப்பாடிய திருப்பதிகம் யாது என்பதற்கும், திருமருகலில் நச்சரவு தீண்டவும் தான் தீண்ட கில்லாது அரற்றிய வணிககுலநங்கை துயர் தீர்ப்பான் நம்பி உயிர் பெறப் பாடிய பதிகம் யாது என்பதற்கும் சேக்கிழாரேதான் விடை தந்து விளக்க வல்லார் என்பதும் அங்கை நெல்லியாம்.

அன்றியும் தேவாரத்தில் குறிக்கப்பெற்ற சில வரலாறுகளின் நுட்பங்களையும், சில தேவாரப் பனுவல்களின் உள்ளுறைத் திட்பங்களையும் பசுமரத்தாணி அறைந்தாங்கு கற்போர் உளத்தில் பதிய வைகரும் திறனும் சேக்கிழார்க்கே உண்டு. சுந்தரர், திருமுது குன்றத்தையர் வழங்கிய பன்னீராயிரம் பொன்னை அவராணைப்படி மணிமுத்தா நதியில் விட்டு, திருவாரூர் கமலாலயத்தில் எடுக்கப் பரவையாரோடு அந் நீர்நிலையில் நின்று "பொன்செய்த மேனியினீர்" என்று பதிகம்பாடித் துதித்தார். எட்டுப் பாட்டளவும் பொன் வெளிப்பட்டிலது. பரவையாரும், "ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடுவீர்" என்று நகைமுகம் காட்டினள். பெண்ணகை பொல்லாதெனினும் புன்னகையோடு சுந்தரர் "ஏத்தா திருந்தறியேன்" என்ற ஒன்பதாவது திருப்பாட்டைப் பாடியபொழுது பொன் பளீரெனத் தோன்றிற்று. இவ்வரலாற்று நுட்பத்தினைத் தேவாரப் பாடல்கொண்டு தெரிவிப்பவரும் சேக்கிழார்தான்.

"முட்டஇமை யோர்அறிய முதுகுன்றில் தந்தபொருள்
சட்டநான் பெருதொழிந்த தளர்வினுல் கையறவாம்

இட்டளத்தை இவளெதிரே கொடுத்தருளும்' எனுந் திருப்பாட்
டேட்டளவும் பொன்காட்டா தொழிந்தருள ஏத்துவார்."

"'ஏத்தாதே இருந்தறியேன்' எனுந் திருப்பாட் டெவ்வுலகும்
கூத்தாடும் அம்பலத்துக் கண்ணுளனுங் கண்ணுதலைக்
கூத்தாதந் தருளாய்இக் கோமளத்தின் முன்னென்று
நீத்தாருந் தொடர்வரிய நெறிநின்றார் பரவுதலும்."

"கொந்தவிழ்பூங் கொன்றைமுடிக் கூத்தனார் திருவருளால்
வந்தெழுபொன் திரளெடுத்து வரன்முறையால் கரையேற்ற
அந்தரத்து மலர்மாரி பொழிந்திழிந்தது அவனியுளோர்
இந்தஅதி சயமென்னே யார்பெறுவார் எனத்தொழுதார்."
(ஏயர்கோன் கலிக்காம நாயனார்—செ. ௧௩௩-௧௩௫.)

என்ற சேக்கிழார் திருவாக்கே அகச்சான்றாதலைக் காண்க. இதே போல் பிறிதொரு வரலாற்றிலும் சேக்கிழார் சுட்டும் நட்பத் திறனை அகத்தில் அருத்தியுடன் இருத்துமின்.

மைலாப்பூர் சிவநேசச் செட்டியார் திருஞானசம்பந்தர்க் கெனப் பூம்பாவை யெனும் பெறலருந் திருவன்னை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தார். பூவெடுப்பான் சென்ற ஒரு மகளைப் பையரவு தீண்ட உயிர் நீங்கிற்று. பெரிதும் மனங்கவன்ற சிவநேசச் செட்டியாரும் உரிய பொருளை உரியவர்க்கே வழங்குதல் மரபென்று அவளது என்பையும் சாம்பரையும் குடத்தடைத்து வெம்பந்தந் தீர்க்கும் சம்பந்தரின் நல்வருகையை எதிர்நோக்கி இருந்தார். சம்பந்தரும் வந்தார்; நொந்தமனத் தந்தையும் குடத்தை முன் வைத்து நிகழ்ந்தவற்றைக் கூறினார். சம்பந்தர் அதனைக் கபாலீச்சரத்தான் திருமுன் கொணரப் பணித்தார். பின், "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். மட்டிட்ட என்ற முதற்பாட்டினில் பாவையாரின் உருவந் துவங்கப்பெற்று, பின் எட்டுத் திருப்பாடல்களில் வளரப்பெற்று, சமணர் பாட்டென்னும் பத்தாவது பாட்டில் பன்னீராட்டைப் பருவத்தினளாய்க் குடம் உடையப்பெற்று தாய் வயிற்றினுள் பத்துமாதம் இருந்து வெளிவரும் குழந்தை போல வெளித்தோன்றினாள்.

"எடுத்த பாட்டினில் வடிவுபெற் றிருநான்கு திருப்பாட்
டடுத்த வம்முறை பன்னிரண் டாண்டளவணைந்து
தொடுத்த வெஞ்சமண் பாட்டினிற் றோன்றிடக் கண்டு
விடுத்த வேட்கையர் திருக்கடைக் காப்புமேல் விதித்தார்."

என்ற சேக்கிழாரின் திருப்பாட்டில் இந்நுண் கருத்துக்கள் அடங்கியிருத்தலை நன்கு அறிக. இங்ஙனே அப்பர் சுவாமிகள்

திருமறைக்காட்டில் கதவந் திறக்கப்பாடிய பதிகத்திலும் என்க. திருநாவுக்கரசர் "இரக்கமொன்றிலீ ரெம்பெரு மானிரே" என்று திருக்கடைக் காப்புச் செய்யுள் பாடும் வரையிலும் கதவம் திறக்கப்பட்டிலது என்ற நுட்பத்தை எடுத்தியம்பியவரும் தொண்டர்சீர் பரவுவார் என்பதையும் இவைகளோடு, வைத்துணர்க.

கூன்பாண்டியனின் உடற்பிணியையும் உயிர்ப்பிணியையும் நோக்கானும், வாக்கானும், பரிசத்தானும், பாவனையானும் தீர்ப்பான் சம்பந்தர் சென்றுழி அருள்ஞானச் செம்மலார்க்கு, அவன் இருக்கை நல்கி நும்மூர் யாது என்று உழுவலன்போடு வினவியஞான்று,

"பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவய முள்ளிட்டங் காதி யாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலநாம் பரவு மூரே."

என்று சம்பந்தர் திருச்சக்கர மாற்றுப்பதிகம் பாடியருளினர். திருஞானசம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளித் திருவாய்மலர்ந்தருளிய பதிகங்கள் பதின்மூன்று. அவைகளுள் எப்பதிகம் எங்கு எதற்காகப் பாடப்பட்டது என்பது தேவாரம்படித்த மாத்திரத்தானே யாவராலும் அறியப்படாததொன்று. சேக்கிழார் ஒருவரே ஒவ்வொன்றிற்குமுரிய அமைவிடத்தைச் சுட்டிப் பொருள் விளக்கஞ் செய்யவல்லார். இந்நிலையில் மேலே காட்டிய திருச்சக்கர மாற்றுப்பதிகம் தென்னவன் 'கெழுவுறு பதியாது' என்று விருப்புடன் கேட்டபோது,

"பொன்னிவளந் தருநாட்டுப் புனற்பழனப் புறம்பணைசூழ்
கன்னிமதிற் கழுமலநாங் கருதுமூ ரெனச்சிறந்த
பன்னிரண்டு பெயர்பெற்றுப் பரவியசொற் றிருப்பதிகந்
தென்னவன்முன் பருள்செய்தார் திருஞான சம்பந்தர்."

என்று சேக்கிழார் இடஞ் சுட்டிப்போந்தார்.

பெரியபுராணத்திற்குப் பொருள் திரட்டும் நெறியில் தேவார அமைவிடம் காட்டுவதும் திட்பநுட்பங் கூறுவதும் சேக்கிழாரது பொதுவியல்பு என்பதற்கு, இதுகாறும் சில சான்றுகள் காட்டினேம். அல்லதூஉம் தேவாரப் பாசுரங்களுக்குச் சொற்பயன் விரித்துப்பொருள் நயம் காண்பதோடு அவைகளின் உட்கிடக்கைகளை எடுத்துப் பகர்தலும் அவருடைய பொருள்போக்கு நெறியில் ஒருமுறை என்பதை இனித் தக்க எடுத்துக்காட்டுகளால் விளக்குவாம்.

'தோடுடைய செவியன்' என்ற பதிகமே திருஞானசம்பந்தரின் முதற் பதிகம். இப் பதிகம் சீகாழிப் பிரமதீர்த்தக் கரையில் எச்சில் மயங்கிடப் பால் தந்தார் யாரெனச் சிவபாதவிருதயராகிய தந்தை மாறுகொண்டோச்சிக் கேட்க, 'தோடுடைய செவியன், தூவெண்மதி சூடியவன், காடுடைய சுடலைப் பொடிபூசியவன், பிரமபுரம் மேவியவன், பெம்மான் அவன் இவன்' என்று உமாதேவியோடுடனுய்க் காட்சி தந்த ஒருவனைத் தமது மேலைச் சார்புணர்ந்து இவ்வுலகச் சார்புகெடத் தந்தையார்க்குச் சுட்டிக் காட்டிப் பாடப் பெற்ற ஒருபதிகம். தமது முதல் திருமுறையில் முதல் பதிகத்தில் முதலடியில் முதல் மொழியில் முதல் எழுத்தில் 'தோடு' என்று வைத்துப் பாடுவானேன் என்று வினவுவார்க்குச் சேக்கிழார் கூறும் பொருள்விளக்கம் நனி இன்பத்தைப் பயக்கவல்லது. சம்பந்தர் தமிழ்மறை பாடத் தொடங்கினர். வேதத்திற்கு மூலம் பிரணவம். எனவே தமிழ் மறை பாடத் தொடங்கிய சிறிய பெருந்தகையார் த் + ஓ என்று தகரவொற்றின்மீது ஓங்காரத்தைப் புணர்த்தித் தமிழிற்கு ஓங்காரம் முதல் என்பதை நினைப்பூட்டினர் என்று சேக்கிழார் எடுத்துக்காட்டுவர் இரண்டாவதாகத் தாம் கூறும் தமிழ் வேதத்தை இறைவன் உலகுய்யக் கேட்டருள்பாலித்தல் வேண்டும் என்ற உட்கிடக்கையால் திருச்செவியைச் சிறப்பித்துப் பாடினர் என்பதுமாம் எனக்கருதுவர்.

"எல்லையிலா மறைமுதல்மெய் யுடன்எடுத்த எழுதுமறை
மல்லல்நெடுந் தமிழால்இம் மாநிலத்தோர்க் குரைசிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து"

என்பது இவ்விளக்கங்களைச் சுட்டி நிற்கும் சேக்கிழாரது தெள்ளமுதத் திருப்பாட்டு.

மங்கையர்க்கரசியார், குலச்சிறையாரிருவரின் வேண்டுகோட்கிணங்கி ஞானசம்பந்தர் மதுரைபுக்கு மடத்தமர்ந்திருந்தார். பானல்வாயொருபாலன் ஈங்கிவன் நம்மை வந்து நலியுமாறெங்ஙனம் எனக் காயமும் மனமும் நீரானும் வாய்மையானும் கழுவுதல் செய்யாச் சமணர்கள் மந்திரத்தால் அவர் மடத்தைத் தீக்கொளுவத் திட்டமிட்டனர். ஆனால் ஆதிமந்திரம் அஞ்செழுத்தோதி ஈசனிணையடி நீழல் வைகி இருந்த சம்பந்தர் இருக்கும் மாதிரத்தினும் செல்ல ஏவிய தீ அஞ்சியது. அழுக்காறெனும் தீப்பிணி கொண்ட அமணர் கைத்தீக் கொண்டு சிவச் செல்வர் வாழ் மடத்தில் கொளுவினர். தீயுந் தீயவர் அழியப் பற்றியது. சம்பந்தர் ஞானத் திருவுருவாய் நான்மறையின் தனித் துணையாய், மண்ணில் வளர் மதிக்கொழுந்தாய், கானத்தின் எழுபிறப்

பாய், அஞ்சுவதொன்றுமில்லை, அஞ்ச வருவதொன்றுமில்லை என்று பிறர் காண ஊனமொன்றில்லா உத்தமராய் வீற்றிருந்தார். இருந்தாரேனும் சைவசீலர் உறை திருமடத்தில் எரியெழத் தீக்கொளுவுதல் சிவ அபராதம் என நினைந்தார். இச்செயலுக்கு முதற்காரணம் சமணராவர்; துணைக் காரணம் அரசனுவன். கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் கடன். அரசன் அதனைச் செய்திலன். எனவே இத் தீச்செயல் 'மன்புரக்கும்மெய் முறைவழு........வெய்ய தீங்கிது வேந்தன்மேற்று' எனக் கருதி,

> "செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
> ஐய னேஅஞ்ச லென்றருள் செய்யெனைப்
> பொய்ய ராம்அம ணகொளு வுஞ்சுடர்
> **பைய வேசென்று பாண்டியற் காகவே."**

என மடத்தைப் பற்றிய நெருப்பைக் கட்டளையிட்டருளினர். சம்பந்தர் நிறைமொழி மாந்தராகலின் அத் தீயும் நில்லாது பாண்டியனைப்போய்ப் பற்றியது. இத் தேவாரத்தில் 'பையவேசென்று பாண்டியற் காகவே' என்ற ஈற்றடி ஆழ நினைத்தற்குரியது. 'பையவே' என்ற முதற் சொல்லும் 'ஆகவே' என்ற ஈற்றுச் சொல்லும் விழுப்பொருள்களைச் சுமந்து நிற்பன. நெருப்பினை ஏவுவார் 'பையவே' என்று கட்டளையிடுவதற்கும் 'ஆகவே' என்று ஆக்கஞ் செப்புதற்கும் காரணங்களும் உண்டாங்கொல் என்று வினவுவார்க்குச் சேக்கிழார் தங்க விடை தருவார். 'தன் வினை தன்னைச் சுடும்' என்ற பழமொழிக்கேற்ப அமணர்கள் தாங்கள் கெட்டொழியத் தீக்கொளுவினர்கள். அரசனுக்கும் தீயூழ் உறுத்துவந்தூட்டுதலால் முதற்கண் துன்புறுதல் வேண்டுமென்பதும் பின் நல்லூழ்ப் பயனுய்ச் சைவ மதத்திற்கு மீண்டு வருதல் வேண்டுமென்பதும், தெய்வச் செங்கோல் சிவநெறி அவனல் பாண்டிநாட்டில் பரவுதல் வேண்டுமென்பதும் அச்சொற்களின் உட்கிடக்கைகளாம். ஏவிய நெருப்பின் பயனுய் அரசன் உயிர் நீப்பின் தம்மை மதுரைக்குப் போரவாவினல் அழைத்து வந்த மங்கையர்க்கரசியாரின் மங்கலத்தாலி பெருகும். அவளும் அமங்கலி ஆவாள். அஃது நிகழ்தல் கூடாது. மந்திரியாராம் குலச்சிறையாரின் ஆழ்ந்த சிவபத்திக்கு இழுக்கு ஏற்படுதலும் கூடாது.

(தொடரும்)

# நெடுநல்வாடை திணையாராய்ச்சி மறுப்புக்கு விடை

[வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார்]

(செல்வி. ௩௨, பரல் ௨, ௮௯-ஆம் பக்கத்தொடர்ச்சி)

நக்கீரனார் பக்கமிருந்து பார்த்தாலொழிய அவர் கருத்துக்களைப் பற்றி நுணுகி யாராய்ந்து கூறவியலாது என்று நினைக்கின்ற மறுப்பாசிரியர், "'சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்' என்ற தொல்காப்பியர் கருத்தும் அதுவே" என்று எங்ஙனம் துணிந்து கூறுகின்றார்? 'உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறியும் ஒருவராகத் தம்மை நினைத்துக்கொண்டாரோ' என்று யான் கூறினால் யாது விடையிறுப்பர்?

'சேனைத் தலைவன் வேலில் வேம்பு சூடியிருத்தல் கொண்டு தலைவன் பாண்டியன் என்றுணர்வது முடிந்த முடிபாகாது' என்பதற்கு இரண்டு காரணங்கள் கூறியுள்ளேன். அடையாள மாலை வேந்தர்க்கேயன்றி அவ்வேந்தர்வழி நிற்கும் சிற்றரசர்க்கும் உரித்தாகக் கூறப்படுதலுண்டு; என்பது ஒன்று. மற்றொன்று, வேறொரு நண்பனாகிய வேந்தனுக்குப் பாண்டியன் துணைப்படையனுப்பியிருக்கலாம். அத் துணைப்படையின் தலைவன் பாண்டியன் படைத் தலைவன் என்பது தோன்ற தன் வேலிற்கு வேம்பு சூட்டியிருக்கலாம் என்பது. முற்கூறிய காரணத்திற்கு எடுத்துக்காட்டாக, "ஈகையங் கழற்கால் இரும்பனம் புடையல்" என்ற புறநானூற்றுப் பகுதியை யெடுத்துக் காட்டிச் சேரவேந்தர்க்குரிய பனம்பூமாலை அதியமானும் சூடியிருந்ததாகக் கூறியிருப்பதை எடுத்துக் காட்டியிருந்தேன். இரண்டாவது கூறிய காரணத்தை மறுக்காது முதல் காட்டிய காரணத்தை மட்டும் மறுத்துள்ளார்.

மறுப்பு: "ஈகையங் கழற்கால் இரும்பனம்புடையல்" என்ற அடி, "தொன்னிலை மரபின் நின் முன்னோர் போல" என்ற அடிக்குப்பின் வந்திருப்பதால் பழமையான சேரர் குலத்திற் பிறந்த நின்னுடைய முன்னோர்களைப் போலவே இரும்பனம் புடையல் சூடினை யெனச் சேரர் உறவினனான அதியமானை ஔவையார் புகழ்ந்தார் என்பது விளங்கும். பனைமாலை புனைந்தவன் என்று கூறியவுடன் அது அதியமானைக் குறிக்கவில்லை. ஆதலால் அஃது ஆராய்ச்சிக்குரியதன்று என விடுக்க. எனவே, முடிவும் பொருத்தமன்று" எனக் கூறியுள்ளார்.

விடை: ஒரு கருத்தை நிறுவ இரண்டு காரணங்கள் காட்டினால் அவ்விரண்டையும் மறுத்தாலன்றி அக் கருத்தும் பொருத்தமன்று என்று கூறுதல் தருக்கநெறியாமா? மேலும், அடையாள மாலை வேந்தர்க்கேயன்றி வேந்தர் வழிநிற்கும் சிற்றரசர்க்கும் உரித்தாகக் கூறுவதுண்டு என்று யான் முதலிற் கூறிய காரணத்தை மறுக்காமல் அதற்காகக் காட்டிய எடுத்துக் காட்டினை மறுத்ததாக எண்ணி ஏதோ எழுதியிருக்கின்றார். யான் எடுத்துக்கொண்ட கருத்து யாது? ஒரு வேந்தர்க்குரிய அடையாள மாலை அவ் வேந்தர் வழிநிற்கும் சிற்றரசர்க்கும் உரித்தாகலாம் என்பது. அதற்காக யான் காட்டிய எடுத்துக் காட்டில் அக் கருத்து இல்லையானால் மறுக்கவேண்டியதே. "சேரர்க்குரிய பனம்பூமாலை அச் சேரர்க்குறவினனாய் அவர் வழி நிற்கும் அதியமானுக்கு உரித்தாக ஔவையார் கூறியுள்ளார்" என்பதை மறுப்பாசிரியரும் கூறுகின்றாரே! அப்படியானால், அவர் எக்கருத்தை மறுத்தார்?

"பனைமாலை புனைந்தவன், என்று கூறியவுடன் அது அதிய மானைக் குறிக்கவில்லை" என்பதே அவர் கூறிய மறுப்பு. அங் ஙனம் கூறினவுடன் அதியமானைக் குறிக்கும் என்பதற்காகவோ, அப் பாடற்பகுதியை யான் காட்டினேன்? ஒரு வேந்தனுக்குரிய அடையாள மாலை அவன் வழிநிற்கும் சிற்றரசர்க்கும் உரித்தாக லாம் என்ற என் கருத்தை நன்கு விளக்குகின்ற அவ் வெடுத்துக் காட்டினைக் காரணமின்றி "ஆராய்ச்சிக்குரியதன்று என விடுக்க" என்று கூறியதும், "முடிவும் பொருத்தமன்று" என்றதும் தருக்க நெறியறியார் கூற்றாய் நிலைபெறாது போதல் காண்க.

வேப்பமாலை இயைபுடைய பிறரும் சூடுதற்குரியது; என்ப தற்குப் பல காரணங்காட்டி யான் நிறுவினேனாகவும் மறுப்பா சிரியர் அவற்றையெல்லாம் மறந்து சில வினவுகின்றார்.

மறுப்பு: இனி, "வேப்பமாலை பிறரும் சூடலாம்; அது கொண்டு பாண்டியன் என்று கூறுவது முடிந்த முடிபு ஆகாது எனின், வேம்பு யாவரும் புனையும் பூவா? மணமுடைய பூவா? வனப்புடைய பூவா? யாரேனும் புனைந்திருக்கின்றார்களா? பண்டைக்கால முதல் இன்றளவும் வாழ்ந்த வேந்தர்களில் வேம்பு புனைந்து அரசு புரிந்தவர் யார் யார்? வேம்பன் என்று கூறினால் அச்சொல் யாரை யுணர்த்தும்? பாண்டியனையன்றி வேறு மன்னரையுணர்த்துமா? பாண்டியனை வென்று அரசுபுரியும் வேந்தன் ஒருவன் ஒரு காலத்தில் வேம்பு புனைந்து இருந்தான் எனினும் அவனது இயற்பெயர் கூறினாலன்றி அவனையுணர்த் துமா? ஆதலால் பாண்டியன் என்று கூறுவது முடிந்த முடிவு தான். அக் காலத்து அரசுபுரிந்த பாண்டியனையே சுட்டும் அது.

நக்கீரர் காலத்து அரசு புரிந்தவன் நெடுஞ்செழியனே ஆதலால் 'வேம்பு தலையாத்த' என்ற குறிப்பு, குடிப்பெயரையுணர்த்தியது மன்றி 'நெடுஞ்செழியன்' என்ற இயற்பெயரையும் சுட்டியது என்பது நச்சினார்க்கினியர் கருத்து" எனத் தம் கருத்தை நச்சினார்க்கினியர் மேல் ஏற்றியுரைக்கின்றார்.

விடை: வேம்பு மணமுடைய பூவா ? என்ற அவர் வினவை நோக்கின் மறுப்பாசிரியர்க்கு வேப்பம் பூவே தெரியாது எனக் கொள்ளவேண்டியுளது. அது கிடக்க வேம்பன் என்று கூறினால் பாண்டியனை யன்றி வேறோர் மன்னனையும் குறிக்கு மென்று யான் கூறினேன் ? படைத்தலைவன் வேலில் வேம்பு சூடியிருந்தமை கொண்டு தலைவன் பாண்டியனாகத்தான் இருக்கவேண்டும் என்று உறுதி செய்யவியலாது என்பதே என் மேற்கோள். அதை நிறுவ இரண்டு வகையான காரணம் கூறியுள்ளேன். அதை மறுக்க இவர் கேட்கும் வினாக்கள் இவர்க்கு எவ்வாறு துணை நிற்கும்? மேலும், "பாண்டியனை வென்று அரசு புரியும் வேந்தன் ஒருவன் ஒருகாலத்தில் வேம்பு புனைந்து இருந்தான் எனினும் அவனது இயற்பெயர் கூறினாலன்றி அவனையுணர்த்துமா?" என்று வினவுகின்றார். இங்ஙனம் வினவுகின்றவர், படைத்தலைவன் வேலில் வேம்பு இருந்தது என்றால் அது கொண்டு பாண்டியன் என்ற குடியை மட்டும் அன்றி, 'நெடுஞ்செழியன்' என்ற இயற்பெயரையும் சுட்டியதாகக்கொண்டது எம்முறையாலோ ? வேப்பமாலை வேந்தன் சூடியிருக்கவில்லை என்பதை மறத்தல் ஆகாது. பாண்டியரன்றி வேம்பு சூடுதல் இல்லையென்றால், நெடுநல்வாடையில் வேம்பு, படைத்தலைவன் வேலுக்கன்றோ சூட்டப்பட்டுளது ?

நக்கீரர் காலத்து அரசுபுரிந்தவன் நெடுஞ்செழியன் ஒருவனே யல்லன், பாண்டியன் நன்மாறனும் அரசுபுரிந்துள்ளான் என்பதையும், அவனை நேரிற்கண்டு நக்கீரனார், "ஏற்றுவலனுயரிய" என்று தொடங்கும் புறப்பாட்டைப் பாடியுள்ளார் என்பதையும் மறுப்பாசிரியர் இனியேனும் உணர்வாராக. "நக்கீரர் காலத்து அரசுபுரிந்தவன் நெடுஞ்செழியனே ஆவன் ஆதலால் 'நெடுஞ்செழியன்' என்ற இயற்பெயரையும் சுட்டியது" என்ற மறுப்பாசிரியரின் ஏதுவும் மேற்கோளும் பயனிலவாதல் காண்க.

இனி, "நெடுநல்வாடையின் கீழ்க்குறிப்பாலன்றிப் 'பாண்டியன் நெடுஞ்செழியன்' என்பது பெறல் இயலாது" என்பதே முடிந்த முடிபாயிற்று. கீழ்க்குறிப்பிலுள்ள பெயரால் இன்னான் என்று தெரிதலால் இயற்பெயர் வெளிப்பட்டது என்று கொள்வோமெனின் ?

"மள்ளர் குழீஇய விழவி னானும்."

என்று தொடங்கும் குறுந்தொகைப் பாடற் கீழ்க்குறிப்பால் 'காதலற் கெடுத்த ஆதிமந்தி பாட்டு' என்று தெரிகின்றமை யால் அதுவும் இயற்பெயர் கூறப்பட்டதாய்ப் புறப்பாட்டாதல் வேண்டும். "அப் பாடலில் இயற்பெயர் வாராமையால் அகப் பாட்டே" என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றமையை மறுப்பா சிரியரும் எடுத்துக்காட்டியுள்ளார் ஆதலின் அதுபற்றி ஆராய்ச்சி வேண்டுவதில்லை.

மறுப்பு: "தாமரைக் கண்ணியை தண்ணறுஞ்சாந்தினை" என்று அடையாள மாலை கூறியுள்ளதால் பார்ப்பனத் தலைவன் என்று குலத்தைச் சுட்டினது எனினும் அக்குறிப்பு ஒருவரைச் சுட்டியதாகாது, பலரைச் சுட்டியதாகும். அக் குலத்தலைவன் தலைவி எனச் சுட்டுமேயன்றி இன்னான் இன்னாள் எனச் சுட்டிக் காட்டா; ஆதலால் அப் பாடல் அகத்தில் வந்துளது," என் கின்றார்.

விடை: தலைவனே தாமரைக் கண்ணியைச் சூடியிருக் கின்றான் என்பது தோன்ற, "தாமரைக்கண்ணியை" என முன் னிலையாக்கிக் கூறியிருக்கும் பகுதி பலரைச் சுட்டுவதாகும் என்பது பொருந்துமா? தலைவனே சூடியுள்ள தாமரைக் கண்ணி இன்னான் எனச்சுட்டிக் காட்டாது என்றால் படைத்தலைவன் வேலில் சூட்டியுள்ள வேம்பு மட்டும் பாண்டியன் குடியையே யன்றி 'நெடுஞ்செழியன்' என்ற இயற்பெயரையும் சுட்டியது என்றது முறையுள்ள முடிபாகுமா? தமக்கொருவிதி; பிறர்க் கொரு விதியா?

நச்சினார்க்கினியர், குறிப்பால் சாதியை யுணர்த்தும் பாடலை அகப்பாட்டாகக் கொண்டுள்ளார் ஆதலின் குறிப்பால் குடி யுணர்த்தும் நெடுநல்வாடையும் அகப்பாட்டாதலை யுடன்பட் டாரே யாவர் என்ற என் கருத்தை மறுக்கவந்த மறுப்பாசிரியர்

மறுப்பு: "நச்சினார்க்கினியர் அவற்றை அகமெனவே கொண் டார் இதனைத் துணையாகக்கொண்டால் அவர் அகம் என்றதை அகம் என்றும் அவர் புறம் என்றதைப் புறம் என்றும் கொள்ள லாமேயன்றி ஒன்றைக்கொண்டு மற்றொன்றை விடுதல் எங்ஙனம் பொருந்தும்? அவர் 'அகம்' என்றதை நான்'புறம்' என்று கூறுவேன். அவர் 'புறம்' என்றதை நான் 'அகம்' என்று கூறுவேன் என்றாலும் பொருத்தமாகும். நெடுநல்வாடையை மட்டும் அகம் என்று கூறுதற்கு அஃது எங்ஙனம் வலிமை யாகும்? அஃது வலியிலதாதல் காண்க." என்று தருக்கநெறி பிறழ்ந்து எழுதுகின்றார்.

விடை: ஒருவர் கூறுவனவற்றுள் பொருந்துவனவும் பொருந்தாதனவும் இருக்கலாம். உடன்பட்டால் அவ்விரண்டை யும் உடன்படல் வேண்டும், இல்லையேல் இரண்டையும் விடல் வேண்டும்; ஒன்றைக் கொண்டு ஒன்றை விடுதல் கூடாதாம். இம் முறையே மேற்கொண்டால்,

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்பது போன்ற மெய்மொழிகளும் பொய்மொழிகளாகவன்றோ போக நேரும்.

மருதக்கலியில்:

"வையைதன்,
நீர்முற்றி மதில்பொரூஉம் போரல்லால் நேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்.'
(கலி. கூஎ.)

என்ற பகுதிக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், பாட்டுடைத் தலைவனைக் கிளவித் தலைவனாகக் கொண்டு வந்தமையின் இது 'அகப்புறம்' என்று விளக்கியுள்ளார். இங்குப் பாண்டியற்குரிய வையை யென்னும் ஆறு கூறப்பட்டுள்ளது. இது மேற்கூறிய வேம்புபோல ஐயப்படுதற்கு இடனின்றிப் பாண்டியற்குரிய ஆறு என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இவ்வாறு வேம்பி னும் வலியுடையதாகிய 'வையை' என்னும் குறிப்பால் பாண்டி யன் தலைவன் என்று பெறவைத்த கலிப்பாட்டு அகப்புறம் ஆகும்போது இயைபுள்ள பிறரும் சூடுதற்குரிய வேம்பு கூறிய நெடுநல்வாடை அகப்புறமும் ஆகாது புறத்திணை ஆயது என்பது பொருந்துமா?" என்று யான் கூறியதற்கு மறுப்பாசிரியர் கூறிய,

மறுப்பு: "வையை யாறு வளைக்கும் புரிசை சூழ்ந்த ஊர் மதுரை யெனவும், ஊரன் என்பதும் மதுரைப் பதியையுடைய பாண்டியன் எனவும் அப் பாண்டியனைத் தலைவனாகக் கொண்டு அகப்பொருளாகிய இன்பப் பகுதி கூறப்பட்டிருப்பதால் அதனை அகப்புறம் என்றார். நெடுநல்வாடையிற் புறப்பொருள் அமைந் திருப்பதால் புறம் என்றார். அகப்பொருளாகக் கொள்ளலா மெனின் பாண்டியன் கிளவித் தலைவனாக அமைந்திருப்பதால் அகமாகாது என்றார். அவர் கூறியது எங்ஙனம் முரணும்?" என்பதாகும்

(இப் பகுதியில் அவர் வாக்கிய அமைப்பும் வழுவியிருத்தல் காண்க.)

விடை: பாட்டுடைத் தலைவனே கிளவித் தலைவனாக வந்துள்ளமை இரண்டு பாடல்களிலும் காணப்படவும் அவற்றுள் ஒன்று, 'அகப்புறம்' எனவும், ஒன்று 'புறம்' எனவும் கூறியது முரணுமாறில்லையென்பது மெய்ம்மையொடு படாதது என்பது வெளிப்படையென்பதை அவர் கூற்றே காட்டிவிடும்.

"நெடுநல்வாடையில் புறப்பொருள் அமைந்திருப்பதால் புறம் என்றார்" என்பது முழுப் பூசுணிக்காயைப் பழஞ்சோற்றில் மறைக்க எண்ணுவார் செயல் போன்றுளது. நச்சினார்க்கினியர், பாண்டியன் அடையாளப்பூ கூறப்படுவதால் அகமாகாது என்றுரைத்திருக்கவும் மறுப்பாசிரியர் புதியதோர் காரணம் கூறுகின்றார்.

தலைவனைப் பிரிந்து இல்லிருக்கும் மெல்லியலாகிய தலைவியின் நிலை கூறுமுகத்தால் தலைவியின் கட்டிலும், கோயிலும் வாயிலும், நகர நெடுந்தெருக்களும், நகரைச் சூழ்ந்துள்ள நானிலங்களின் இயல்புகளும், கூதிர்க்காலத்துக் குளிரும், அக்குளிரால் உயிர்கள் உறுந் துன்பமும் கூறிப் பின் தலைவி படும் அல்லலும் கூறி நூற்றறுபத்தேழு அடிகளால் விவரித்து இல்லிருத்தலாகிய அகப்பொருளை விளக்கிப் பின் இருபது அடிகளில் பாசறையியல்பும், ஓரடியில் செவிலியின் வேண்டுகோளும் கூறியுள்ள இப் பாடலில் அகப்பொருள் அமையாமல் புறப்பொருள் அமைந்திருக்கின்றது என்பதும் 'அதனால் புறம் என்றார்' என்று நச்சினார்க்கினியர்மேல் அப் பிழையை யேற்றுவதும் எத்துணைப் பொருத்தமுடையன என்பதைப் புலவருலகம் காண்பதாக.

"வஞ்சிதானே முல்லையது புறனே."

என்று தொல்காப்பியர் கூறியுள்ள கருத்தையுணர்ந்து நக்கீரனார், முல்லை என்னும் அகத்திணையையும வஞ்சியென்னும் புறத்திணையையும் ஒரு பாடலில் அகங்கை புறங்கைபோல அமைத்துக் காட்ட விரும்பி, முன்னர் முல்லைத் திணையைக் கோப்பெருந்தேவிபால் வைத்து விளக்கிப் பின்னர் அம் முல்லைக்குப் புறமாகிய வஞ்சித் திணையைத தலைவன்பால் வைத்து விளக்கியுள்ளார்" என்று யான் கூறியதற்கு,

மறுப்பு: "இக் கூற்று, நக்கீரனார் அகங்கை புறங்கை அறியாதவர்போல அகப்பொருள் இலக்கணமும் புறப்பொருள் இலக்கணமும் வேறு வேறு என்பதை யறியாமல் அகமாகிய முல்லையையும் புறமாகிய வஞ்சியையும் ஒரே பாடலில் அமைத்திருக்கின்றார் என்றும் அகம் வேறு; புறம் வேறு; என அறிந்திருந்தால் இவ்விரண்டு பொருளையும் ஒருங்கமைத்துப் பாடியிரார் என்றும்

விளங்குகின்றது. எனவே, "பொக்கமில் புலவராம் நக்கீரனார்' என அவரைப் புகழ்ந்த புகழ்ச்சி இகழ்ச்சியாயிற்று" என்பது.

விடை: அகத்திணைப் பாடலில் புறத்திணையும் வந்து கலப்பதுண்டு என்பதும் அவ்வாறு புறத்திணை கலக்குமிடத்து இயற்பெயர் வரலாம் என்பதும் தொல்காப்பியர் கருத்து என்பதை:

"புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்லது
அகத்திணை மருங்கில் அளவுதல் இலவே." (அகத்: ருரு)

என்ற சூத்திர முணர்த்துவதாக நச்சினார்க்கினியரே யுரைத்துள்ளார். மேலும், "எனவே புறத்திணை கருப்பொருளாயும் உவமமாயும் அகத்திணையுட் கலக்கும் என்பதும் இதனானே விரித்தாராயிற்று" என்றும் கூறியுள்ளார். தொல்காப்பியர் அகத்திணையேழற்கும் இன்ன இன்ன திணை புறமாகும் என்று பொருத்தமுணர்ந்து,

"வஞ்சி தானே முல்லையது புறனே."

என்றாற்போல எல்லாத் திணைகட்கும் கூறியிருக்கும் நுட்பத்தையும் அந் நுட்பத்தையுணர்ந்து நச்சினார்க்கினியர், "அகங்கையிரண் டுடையார்க்குப் புறங்கை நான்காகாது இரண்டாயவாறுபோல அகத்திணை யேழற்கும் புறத்திணை யேழென்றலே பொருத்தமுடைத்தாயிற்று. எனவே அகத்திணைக்குப் புறத்திணை அவ்வவ் நிலத்து மக்கள் வகையாற் பிறந்த செயற்கை வேற்றுமையாதலின் ஒன்றற்கொன்று இன்றியமையாவாயிற்று." என்று கூறியுள்ள உரையின் திட்பத்தையும் காண்க.

"வஞ்சி தானே முல்லையது புறனே."

என்ற சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர்,

"முதல் எனப்பட்ட காடுறையுலகமும் கார்காலமும், அந் நிலத்திற்கேற்ற கருப்பொருளும், அரசன் பாசறைக்கண் தலைவியைப் பிரிந்திருத்தலும், அவன் தலைவி அவனைப் பிரிந்து மனைவயின் இருத்தலும் ஆகிய உரிப்பொருளும், ஒப்பச் சேறலின் வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று. வெஞ்சுடர் வெப்பம் நீங்கத் தண்பெயல் பெய்த நீரும் நிழலும் உணவும் பிறவும் உளவாகிய காட்டகத்துக் களிறு முதலியவற்றோடு சென்றிருத்தல் வேண்டுதலின், வஞ்சிக்கு அம் முதல் கருவுரியும் வந்தனவாம். முல்லைப் பாட்டினுள்,

'கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி

வேட்டுப்புழை யருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி.'

என்பதனானுணர்க.'' என எழுதியிருத்தல் காண்க. இங்கு முல்லையாகிய அகத்திணைக்கு வஞ்சி புறமாதற்குரிய காரணங்களை விளக்கியிருப்பதும், அகங்கை போன்ற முல்லைப்பாட்டில் புறங்கை போன்று வஞ்சித்திணை பொருந்தியிருப்பதும், அதில் முதல் கருவுரி வந்திருப்பதும் காட்டுதற்கு அம்முல்லைப் பாட்டின் ஒரு பகுதியையே நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டியிருப்பதும் காண்க.

இவற்றை யெல்லாம் ஊன்றி நோக்கி யுணர்வார்க்கு அகங்கை புறங்கை யறியாதவர் யார் என்பது தெற்றெனப் புலப்படும். "அகமாகிய முல்லையையும் புறமாகிய வஞ்சியையும் ஒரே பாடலில் அமைத்திருக்கின்றார் நக்கீரர்" என்பது அவர்க்கு இகழ்ச்சியா? புகழ்ச்சியா? நோக்கி யுணர்க.

வஞ்சித் திணையில்,

"அழிபடைதட்டோர் தழிஞ்சி."

என்ற துறைக்கு எடுத்துக்காட்டாக,

"வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே."

என்ற நெடுநல்வாடைப் பகுதியை நச்சினார்க்கினியர் காட்டியிருத்தலாலும், "இப் பாட்டுத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மண்ணசையாற் சென்று பொருதலின் இப் போர் வஞ்சி" என அவர் நெடுநெல்வாடை யுரையில் எழுதியிருத்தலாலும், அந் நெடுநல்வாடையின் பிற்பகுதி வஞ்சித் திணையாதல் நச்சினார்க்கினியர்க்கும் உடன்பாடே என்பது தெள்ளிதிற் புலனும். முல்லைப் பாட்டில் முல்லையாகிய அகத்திணையும், வஞ்சியாகிய புறத்திணையும் அமைந்திருத்தலை நச்சினார்க்கினியர் காட்டினாராதலானும், நெடுநல்வாடையில் பிற்பகுதி வஞ்சித்திணையாதலை விளக்கினாராதலானும் அந் நெடுநல்வாடையின் முற்பகுதி முல்லைத்திணையாம் என்பதும் உடன்பாடாதல் வேண்டும். மேலும், முல்லையுள் கூதிர் வந்தது என்பதற்கு அவர் காட்டிய,

"மழையில் வான மீனணிந் தன்ன." (அகநா - ௨௬௪)

என்று தொடங்கும் முல்லைத்திணைப் பாட்டிலும், தலைவன்,

"வெஞ்சின வேந்தன் பாசறை யோரே."

என அம் முல்லைக்குப் புறமாகிய வஞ்சித்திணையை வைத்துக் கூறியிருத்தலும் காண்க. அகத்திற்கும் புறத்திற்கும் இத்தகைய இயைபு இல்லாக்கால், "வஞ்சிதானே முல்லையது புறனே" என்று கூறுதலால் பயனின்மையும் ஓர்க.

தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமையும் முறையுறப் பெற்றுத் தமிழ்ப் புலமைக்கு வரம்பெனத் திகழ்ந்த மறைமலையடிகளார், தாம் நுணுகி ஆராய்ந்து எழுதிய பட்டினப்பாலை ஆராய்ச்சியில், 'வாகை' என்ற பகுதியில்,

"பாலை என்னும் மக்கள் அக ஒழுக்கத்தைக் கூறுகின்ற இப் பாட்டின்கண் அவரது புறத்து ஒழுக்கமும் கூறவேண்டின் அப் பாலையென்னும் அகவொழுக்கத்தோடு இயைபுடைய 'வாகை' என்னும் புறவொழுக்கமே கூறற்பாற்றும். என்னை?

'வாகைதானே பாலையது புறனே.'

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார் ஆகலின் என்க" எனவும்,

"அகத்தே நிகழும் அன்பை வெற்றிகாணும் பாலையும், புறத்தே நிகழும் பகைவர் மறத்தை வெற்றிகாணும் வாகையும் தம்முள் ஒப்புமையுடையவாதல் தெற்றெனப் புலப்படும்" எனவும்,

"பாலையோடு இயைபுடைய, 'வாகை' யென்னும் புறத்திணையும் உருத்திரங்கண்ணனார் என்னும் நல்லிசைப் புலவரால் ஈண்டுச் சொல்லப்பட்டதென்க," எனவும் கூறியுள்ளமை காண்க.

இவ்வாறு தொல்காப்பியனாரும் நச்சினார்க்கினியரும், மறைமலையடிகளாரும் ஆராய்ந்து அகத்திணைப் பாடலில் புறத்திணைப் பகுதி வந்து பொருந்துவதை யுடன்பட்டு அதன் சிறப்பை யுரைத்திருப்பவும் உம்பற்காட்டு இளங்கண்ணனாரும் கடியலூர் உருத்திரங்கண்ணனாரும், நப்பூதனாரும் தாம் பாடிய அகத்திணைப் பாடல்களில் அவ்வகத்திணையோடு இயைபுடைய புறத்திணைப் பகுதி பொருந்துமாறு அமைத்திருப்பவும், மறுப்பாசிரியர், அகத்திணையும் புறத்திணையும் கலந்த பாடல் என்பது, 'புதுவகையான திணை' எனப் பொருத்தமின்றிப் புகலுதல் வியப்பாக வுள்ளது.

"அகத்திணையும் புறத்திணையும் ஒருங்கு வைத்து ஒரு பாடலில் விளக்கும் தன்மையைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலையால் நன்குணரலாம்" என்று யான் கூறியதற்கு மறுப்பாசிரியர்,

மறுப்பு: "இது கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்கு மயக்கத்தைக் கற்பித்ததாகும். அவர் மயக்கத்தைப் பண்டைப் புலவர் பலர் மேலும் ஏற்றுவது போன்றது இவ்வாராய்ச்சி." என்று இகழ்ந்து கூறியுள்ளார்.

யார் மயங்கிக் கூறியது என்பதைப் புலவருலகம் காண்பதாக.

பட்டினப்பாலையில் உருத்திரங்கண்ணனார், பாட்டுடைத் தலைவன் வேறாகவும் கிளவித் தலைவன் வேறாகவும் அமைத்துள்ளார் ஆதலின் புறத்திணை யுவமமாக வந்து கலக்குமிடத்தில் அப் பாட்டுடைத் தலைவன் பெயரும் புகழும் வாகையும் எல்லாம் விளங்க உரைத்தார்.

நெடுநல்வாடைக்குப் பாட்டுடைத் தலைவனே கிளவித் தலைவனாக அமைந்தமையின் அவன் இயற்பெயர் முதலியன கூறவில்லை. முல்லைத்திணைக்குப் புறத்திணையாகிய வஞ்சித்திணைக்குரிய வீரனாகத் தலைவன் இருக்கின்றான் என்பதை மட்டும் விளக்கிச் சென்றார் நக்கீரனார் என்பதுணர்க.

மறுப்பாசிரியர்க்கு விடையாக இதுகாறும் யான் கூறியவற்றால் அவர் கூறிய மறுப்புக்கள் யாவும் நிலைபேறின்றி வீழ்ந்தமையும்' யான் முதற்கண் வரைந்தவாறு நெடுநல்வாடை முல்லைத் திணைப் பாடல் ஆம் என்பது திண்ணிதாய் நிலைபெறுதலும் அறியலாம்.

---

## விருந்துண்ணல்

வெள்ளி சனி திங்கள் விருந்தாம் புதனுமாம்
கள்ள வியாழன் கசப்பிக்கும்—தெள்ளுகதிர்
தீராப் பகைகாட்டும் செவ்வாய் தனக்கோபின்
வாராப் பகையும் வரும்.

## கோடிப்புடைவை கட்டல்

காரியில் அழுக்க தாகும் கதிரவன் பீடை காட்டும்
மாரியில் நனையுந் திங்கள் வன்புதன் கந்தை யாகும்
வீரியம் இல்லைச் செவ்வாய் வெள்ளியில் மடந்தை சார்வாள்
கூரிய வியாழன் நன்றாம் குலாவிய ஆடை சாய்வு.

---

# மறைமலையடிகளின் மணிமொழிகள்

(செல்வி, சிலம்பு-௩௨, பரல்-௨, ௧௩௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(௨௪) அக் கட்டளைப்படியே அந் நாயன்மார்கட்கு நாள் வழிபாடும் ஆண்டுவிழாவும் ஒவ்வொரு திருக்கோயில்களினுந் தொன்றுதொட்டுச் செய்யப்பட்டு வருதலைப் போலிச் சைவர்கள் பார்த்ததில்லையா? இழிந்த சாதியாராகக் கருதப்பட்ட நாயன்மார்கள் சிவபிரானோடு ஒப்பக் கோயில்கடோறும் வைத்து வணங்கப்பட்டு வருகையில், அந் நாயன்மார் மரபிற் பிறக்குந் தவம் உடைய சான்றார், பறையர், செம்படவர், வண்ணார், எண்ணெய் வாணிகர் என்போரைத் தென்னாட்டுச் சிவபிரான் திருக்கோயில்களில் நுழையவிடாத போலிச் சைவரின் புல்லறிவினுந் தலையெடுப்பினுங் கொடியவை வேறுண்டோ கூறுமின்கள்.

(௨௫) இவர்களுடைய இக் கொடுமைக்கு அஞ்சியன்றோ திருநெல்வேலி மாகாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட சாதியாரில் எண்ணிறந்தோர் கிறித்துவ மதம் புகுந்தனர். இன்னும் புகுகின்றனர். இவ்வாறு சைவ சமயத்திற் பிறந்த மக்களெல்லாரும் நாளுக்குநாட் கிறித்துவராய்விட்டாற் பிறகு சிவபிரான் கோயில்களை வணங்க வருவார்தாம் யார்? இதுதானும் உணர்ந்து பார்க்குஞ் சிறியதோர் அறிவுதானும் இன்றிச், சைவ சமயத்தவராய் இருக்கும் வரையில் தாழ்த்தப்பட்ட சாதியாரை முன்னேற வொட்டாமற் பலவகையால் ஈரநெஞ்சமின்றித் துன்புறுத்தித், தாமே அவர்களைக் கிறித்துவ மதம் புகுமாறு செய்துவிட்டு, அவர்கள் கிறித்துவ மதம் புகுந்து மேல்நிலைக்கு வந்தபின், அவர்கள் முன் அடக்கஒடுக்க வணக்கத்தோடு சென்று, பல்லை இளித்துக் காட்டியுங் கெஞ்சிய முகத்தோடு தலைகுனிந்து நின்றும், அவர்கள்பாற் பல உதவிகளைப்பெறும் போலிச் சைவரின் செயல் பெரிதும் அருவருக்கத் தக்கதாயிருக்கின்றதன்றோ?

(௨௬) எல்லாச் சாதியினரையுங் கோயிலினுள் விடுத்து, அவருட் சிவபிரான் திருவடிக்கண் மெய்யன்பு பூண்டு ஒழுகினார்க்கு, அக் கோயில்களினுள்ளேயே திருவுருவங்கள் சமைத்து நிறுத்தி அவரை வழிபட்டுவரும் வழக்கந் தொன்றுதொட்டு நடைபெற்று வராநிற்பவும், அச் சிறந்த வழக்கத்திற்கு மாறாகப் போலிச் சைவர்கள் தாழ்ந்த வகுப்பினரைக் கோயில்களினுள்ளே விடுவதில்லையெனப் புதியதொரு போலி வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, அப் போலி வழக்கத்தின் துணையால் ஆங்கில அரசரைத் தமக்குத் துணைகூட்டி வைத்துத், தாழ்ந்த வகுப்பினரைக் கோயில்களினுள்ளே விடுவதில்லையெனப் புதியதொரு போலி வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, அப் போலி வழக்கத்

தின் துணையால் ஆங்கில அரசரைத் தமக்குத் துணைகூட்டி வைத்துத், தாழ்ந்த சாதியாரைக் கோயிலினுள்ளே நுழைய விடாமல், அம் முயற்சியில் மட்டும் விடாப்பிடியாய் நிற்கின்றார்களே.

(உஎ) நம் நாட்டவரும், நம் சமயத்தவரும், நம்முடைய வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டும் எல்லா உதவிகளையுஞ் செய்துவருபவருமான பறையர், சான்றார், ஏகாலியர், எண்ணெய் வாணிகர் முதலியோர்க்குக் கொடுமை செய்வதாகிய தீயவழியில் தானா இப் போலிச் சைவர்களுக்கு இத்துணை முயற்சியும் விடாப்பிடியும் இருத்தல் வேண்டும்.

(உஅ) அனைவரையுஞ் சாதிவேற்றுமை பாராமற் கோயிலினுட் போகவிட்டு, அறிவுடையோர் நன்கு மதிப்பையும் இறைவனது அருளையும் பெறக்கடவராக.

(உகூ) இவர்கள் அவ்வாறு செய்யாதொழியின் அருளாளரான ஆங்கில அரசரே அனைவருந் திருக்கோயிலினுட் புக விடைதரும் நாள் விரைவில் வரும். அப்போது இப் போலிச் சைவர்கள் தம்மால் ஆவதொன்றுமின்றிச் செயலற்று எல்லாராலும் இழிக்கப்பட்டு நிற்பர்.

(௩௦) திருநெல்வேலியிலுள்ள சைவரும் பார்ப்பனரும் இப்போதே எல்லா வகுப்பினரையும் உயர்வுதாழ்வு கருதாது திருக்கோயில்களினுட் செல்லவிடுகுவராயின், அவர்களது அவ் விரக்கச் செயலை உலகம் மீக்கூறிக் கொண்டாடும். அவர்கள் அங்ஙனஞ் செய்யாது தமது கொடுஞ்செயலிற் காழ்ப்பேறி நிற்பராயின், ஆங்கில அரசினரே திருவுளமிரங்கி எல்லா வகுப்பினருங் கோயிலின் உட்செல்லக் கட்டளையிடும்போது அப் போலிச் சைவரும் பிறருந் தம்மாற் செய்யலாவதின்றி இழிபுற்று எல்லாராலும் எள்ளனஞ் செய்யப்பட்டு மாழ்கி நிற்பரென்க.

(௩க) இளமையில் நான் வேதங்களை உருப்போட்டதுண்டு. உருப்போட்டபின் வாயிலிருந்து இரத்தம் இரத்தமாக வரும். இப்படி இரத்தம் வருவதற்கு மூலகாரணம் என்ன? என்று மருத்துவர் பலரைக் கேட்டேன். மருத்துவர்கள் ஏதேதோ காரணங்களைச் சொன்னார்கள். ஒரு மருத்துவர் என்னைக் காலையில் ஓதுகின்ற உபநிஷத்தையும், வேதங்களையும் பதினைந்து நாட்கள்வரை நிறுத்திவைக்கச் சொன்னார். உபநிஷத்தையும் வேதத்தையும் நிறுத்திவைத்துத் தமிழையே ஓதினேன். அப்பொழுது இரத்தம் வரவில்லை. அதிலிருந்து சமஸ்கிருதம் 'இரத்தமொழி' என்று முடிவு செய்தேன்.

(தொடரும்)

## கடிதம் - ரு

பல்லாவரம்
29—12—33

திருவாளர் பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியாரவர்கள்,
"செந்தமிழ்ச் செல்வர்"
36, நாட்டுப் பிள்ளையார்கோயில் தெரு, சென்னை.

அன்புமிக்க கண்ணப்ப முதலியாருக்கு அம்பலவாணர் அம்மை திருவருளால் எல்லா நலங்களும் மேன்மேற் பெருகுக.

23-ஆம் நாள் நீங்களெழுதிய கடிதத்தால் நுங்கள் அருமை மனைவி சடுதியில் இம்மை வாழ்வு நீத்தமை தெரிந்து இங்கு எல்லேமும் மிக வருந்தினேம். ஊழ்வினையும் நம்மவர் நன்கு வாழத் தெரியாமையுமே இங்ஙனம் நேரும் முதிராச் சாக்காடுகட்குக் காரணமாகும். உயிரோடிருக்கையிலேயே தெரிவித்திருந்தால் போய் முகத்தையாவது காணலாமே என்று இங்கு வீட்டம்மை சொல்லித் துயருறுகின்றாள். தாயில்லாக் குழந்தைகளுடன் தனியே வருந்தும் நுங்கள் நிலையை நினைந்து எமது நெஞ்சம் நெக்குருகுகின்றது. நம் ஆண்டவன் நுங்கட்கும் நுங்களருமைக் குழந்தைகட்கும் ஆறுதல் அளித்து நுங்கள் வாழ்க்கையை இனிது நடத்துகவென்று அவன் திருவடிகளை இறைஞ்சுதும்.

அன்புள்ள,
**மறைமலையடிகள்**

## கடிதம் - சு

பல்லாவரம்
25—9—1930

அன்புமிக்க நமச்சிவாயருக்குத் திருவருளால் எல்லா நலங்களும் பெருகுக.

22-ஆம் நாள் நீங்கள் எழுதிய கடிதமுஞ் சுதேசமித்திரன் துண்டும் வந்தன. பார்த்து மகிழ்ந்தேம்.

திருநெல்வேலியில் 4, 5-இல் கூடிய சைவர் மாநாட்டுக்கும், 11-இல் கூடிய சைவசித்தாந்த சங்கத்திற்கும் அவைத் தலைவராய்ச் சென்று இப்போதுதான் இங்கு மீண்டேம்.

கோயம்புத்தூர், பொள்ளாச்சிப் பக்கம் நம் மொழிக்கும் சமயத்திற்கும் ஏதொரு நன்முயற்சியும் நடைபெறக் காணேம். அப் பக்கங்களிற் பத்திடங்களில் நமது விரிவுரை பத்து நடக்குமாறு முயன்று ஒவ்வோர் இடத்திலும் நூறு ரூபாவுக்குக் குறையாமல் திரட்டி ஆயிரம் ஆயிரத்தைந்நூறு ரூபா அனுப்பினுல், அத்தொகை கொண்டு நம்முடைய நூல்களைக் காலந்தாழாமல் விரைந்து அச்சிட்டு வெளியிடலாம். நம் விரிவுரைகள் கேட்டு நம் மக்களும் அறிவுடையராவர். உங்கட்கும் பெரும் புகழும், செல்வாக்கும் உண்டாம். உங்களை

யொத்த மெய்யன்பர்கள் இத்தகைய பெருமுயற்சி செய்தாற்முன் நம் நாடு செழிக்கும்.

அறிவுரைக் கொத்திலிருந்து நீங்களெடுத்திருக்கும் வரிகளை எமது பெயருடன் வெளியிடலாம். நமது பொதுநிலைக் கழக ஆண்டுவிழா- அறிக்கை அச்சாகின்றது. அதனுடன் உருவப் படங்கள் வரும்.

நுங்களன்புடைமைக்கு மிக மகிழ்கின்றேம். நலம்.

அன்புள்ள,
**மறைமலையடிகள்**

## கடிதம் - எ

பல்லாவரம்
10—10—'30

**அன்புமிக்க திருவாளர் நமச்சிவாயர்க்குச் சிவபிரான் திருவருளால் எல்லா நலங்களும் பெருகுக.**

19-9-1930-இலும், 3-10-1930-இலும் நீங்கள் எழுதிய அன்புள்ள கடிதங்கள் வந்தன. கட்டிட முயற்சி, கழக முயற்சி முதலான பலவற்றையும் நடத்தி வருவதால் ஒழிவில்லை. சுதேசமித்திரனில் வந்ததற்கு மறுப்பு 'பண்டைக்காலத் தமிழர் ஆரியர்' என்னும் நூலின் 3-ஆம் பதிப்பில் விரிவாக எழுதி வெளியிடலாம். எழுதுவதை அச்சிடும் செலவுக்குத்தான் பெரிதும் இடர்ப்படுகின்றேன். குறைந்தது இருநூறு ரூபா வரையில் அதன் அச்சுச் செலவுக்கென்று நீங்களேயாகவாவது, அல்லது அங்குள்ள அன்பர்களிடமிருந்தாவது திரட்டி அனுப்பினுல் அந்நூலைப் பெருக்கி யெழுதி, உங்கள் உதவியால் வெளியிடப்பட்டதென்பதும் அதிற் குறிப்பிடலாம்.

''மறைகள் நான்கு'', என்று அப்பர் அருளியது வடமொழியிலுந் தமிழிலும் அஞ்ஞான்றிருந்த வேதங்களையே. இஞ்ஞான்று பார்ப்பனர்களால் இருக்கு முதலியனவாக வழங்கப்படும் நான்கும் பழைய வேதங்கள் அல்ல. இதனைப் பற்றி எமது ஆராய்ச்சியை எம்முடைய ''வேளாளர் நாகரிகம்'', ''மாணிக்கவாசகர் காலம்'' முதலிய நூல்களிற் பாருங்கள்.

எம்முடைய எவ்வெந்நூல்களிலிருந்து எவ்வெப் பகுதிகளை எடுத்துப் பயன்படுத்த விரும்புகிறீர்கள்? தெரிவித்தால் அதன்பின் அதனைப்பற்றி எழுதுகின்றேன்.

நமது கழக விழாவுக்கு நீங்கள் வருவதையும் நுங்களிடமிருந்தும் நுங்கள் வாயிலாக மற்ற அன்பர்களிடமிருந்தும் தக்கபடி பொருளுதவியையும் எதிர்பார்க்கின்றேம். நமது கழக விழாச் செலவுக்குப் பொருளுதவி செய்யும் அன்பர்களின் புகழ் இத் தமிழ்நாடெங்கும் பரவித் துலங்கும்; புண்ணியமும் பெருகும். இதனுடன் அனுப்பியிருக்கும் விழா அறிக்கையை அன்பர்களுக்குக் கொடுத்து உதவி செய்யுங்கள். நலம்.

அன்புள்ள,
**மறைமலையடிகள்**

# செய்திகளும் குறிப்புக்களும்

## (க) இந்தி பற்றி ஆச்சாரியார் கருத்து அன்றும் இன்றும்

"இந்தியை அரசாங்க மொழியாக்க அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்ட சமயத்தில் எதிர்காலம் பற்றி நமக்குத் தெரியாது. மொழி வழி மாநிலங்கள் உருவாகுமென்று அப்போது நாம் சிந்திக்கவில்லை. ஆகவே அன்று தேசிய ஒற்றுமைக்காக இந்தி அரசாங்க மொழியாக வேண்டும் என்று கூறினேன். இன்று மொழிவழி மாநிலங்கள் அமைக்கப் பட்டுவிட்டன. அந்தந்த மாநிலத்தில் அந்தந்த வட்டார மொழியே அரசாங்க மொழியாகிவிட்டது. இந்த நிலையில் இந்தியைத் திணிப்பது தகாது. முடியக்கூடிய காரியமுமன்று." என, கடந்த 11—10—57-இல் தாம்பரம் கிறித்தவக் கல்லூரி மாணவர் கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார். அத்துடன் ஆங்கிலத்தைக் கைவிடுவது தவறு என்றும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிற்சி மொழியாக அந்தந்த வட்டார மொழிகளே இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**குறிப்பு:** பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தியை ஆதரித்தீர்களே! இன்று எதிர்க்கிறீர்களே! ஏன் இந்த முரண்பாடு? என்று கேட்பவர்களுக் கெல்லாம் சுருக்கமும் விளக்கமும் கூடிய முறையில் திரு. ஆச்சாரியார் பதில் கூறிவிட்டார். இதன் பிறகாவது மொழி பற்றிய போராட்டத் தில் அனைவரும் ஒருமனப் பட்டு வடவர் ஆதிக்கத்தின் சின்னமாகத் தலைகாட்டும் இந்தியை விரட்டித் தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் விடுதலை தேடித்தருவார்களாக.

## (உ) இந்தியால் மக்கள் நிலை தாழ்வடையும்

"ஆங்கிலேயர்மீது இருந்த வெறுப்பு ஆங்கில மொழியின் மீது திரும்பியிருப்பது தீவினைப் பயனே. அரசியல் கண்ணோட்டத்துடனே இச் சிக்கல் அணுகப்படுகிறது. இந்தியைப் புகுத்துவதானது இந்தி பேசாத பகுதிகளில் உள்ள மாணவர்களைப் பாதிக்கும். இந்தி பேசாத பகுதி மக்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுவர்." என்று பாராளுமன்ற உறுப்பினர் திரு. பிராங் அந்தோணி கடந்த 27—10—57-இல், ஆங்கிலோ இந்திய சங்கத்தின் ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் பேசிய போது குறிப்பிட்டார். மேலும், அவர் பேசியபோது ஆங்கிலம் நீங்கினால் இந்தியா மூன்றாந்தர நாடாகிவிடும் என்றும் கூறியுள்ளார்.

**குறிப்பு:** ஆம்; மொழிபற்றிய இச் செய்தி அரசியல் கண்ணோட் டத்தோடுதான் காணப்படுகிறது. அதனால்தான் இந்தி நாட்டு மொழி யாவது தீங்கு பயப்பதாகும் என்கிறோம். இதனைப் புரிந்துகொள்ள இயலாதவர்கள்தாம் தேசீயம் பேசித் தமிழகத்தை அடிமை வாழ்வில் ஆழ்த்தப் பார்க்கின்றனர். இந்நிலை மாறவேண்டுமானால் தமிழரும் அரசியல் கண்கொண்டு எதனையும் காணல் வேண்டும்.

## (ங) தமிழ் ஆட்சிமொழியாக முதல் நடவடிக்கை

"தமிழை ஆட்சிமொழியாக்குவதில் முதல்படியாக எந்தெந்த அலுவற் பகுதிகளில் மேற்கொள்வது என்பதை அரசாங்கம் உறுதி செய்துள்ளது. இதில் நீதிமன்றம் நீக்கப்பட்டுள்ளது. ஆட்சிமொழி

செயற்குழு விரைவில் அலுவற் பகுதி சட்டதிட்டங்களை மொழிபெயர்க்கும் வேலையை மேற்கொள்ளும்."

**குறிப்பு:** இங்ஙனம் ஆட்சிமொழித் திட்டம் ஆமை வேகத்தில் நிறைவேற்றப்படும் இத்தகைய செய்திகள் புதியன அல்லவாயினும், அரசியலார் தம் முயற்சியைக் கைவிடாது ஏதேனும் செய்துகொண்டிருக்கும் அளவில் மகிழ்ச்சியே.

## (ச) இந்திக்குத் தென்னகத்துப் பெருமக்களின் எதிர்ப்பு

"இந்தியைக் கட்டாயமாகத் தென்னகத்தில் திணிப்பது தீங்கு பயப்பதும், நாட்டின் ஒற்றுமையைக் குலைப்பதுமாகும். எனவே இதனை மீண்டும் சிந்தித்து மைய அரசியலார் தமது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்." என்று திரு. சி. 'இராசகோபாலாச்சாரியார் அவர்களும் வேறு தென்னகத்துப் பெருமக்களில் 34 பேர்களும் கையொப்பமிட்டு ஒரு வேண்டுகோளை இந்திய நாட்டு முதன்மை அமைச்சர் பண்டித நேரு அவர்கட்கு அனுப்பியுள்ளனர்.


**குறிப்பு:** பண்டித நேரு அவர்கள் தலையிட்டுத் தென்னகத்தில் இந்தி விரைவாக நுழைவதைத் தடுக்கவேண்டும் என்று நாட்டுநிலை உணர்ந்து இப் பெரியவர்கள் விடுத்திருக்கும் வேண்டுகோள் தமிழரின் வெற்றி என்றே சொல்ல வேண்டும். கையொப்பமிட்டிருப்போரின் பட்டியல் கீழே தரப்படுகிறது, தமிழர் நினைவில் வைப்பதற்காக:

திருவாளர்கள், சி. இராசகோபாலாச்சாரியார், சி. பி. இராமசாமி ஐயர், க. சீனிவாசன் ('இந்து' ஆசிரியர்), டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், எஸ். ஜி. மணவாள ராமானுஜம், எஸ். அனந்தராமகிருஷ்ணன், ஆர். வி. கிருஷ்ணய்யர், சி. ஆர். சீனிவாசன் ('சுதேசமித்திரன்' ஆசிரியர்), ஏ. என். சிவராமன், எஸ். பி. ஆதித்தன் ('தினத்தந்தி' ஆசிரியர்), எஸ். எஸ். வாசன் ('ஆனந்தவிகடன்' ஆசிரியர்), டி. சதாசிவம், காசா சுப்பாராவ், வி. எல். எத்திராஜ், வி. சி. கோபாலரத்தினம், எஸ். ஏ. மஜீத், எம். சுப்பராய ஐயர், ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம் கே. சண்முகம், டாக்டர் ரா. பி. சேதுபபிள்ளை, எம். எம் பட், திருமதி உருக்குமணிதேவி அருண்டேல், திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி, டி. கே. சண்முகம், டி. கே. பகவதி, எ. ஜி வெங்கடாச்சாரி, எஸ் ஆர். வெங்கட்ராமன், கு. கோதண்டபாணிப் பிள்ளை, ஏ. சுப்பையா, எஸ். நாராயணசாமி, பி. ஜே. அனந்தராஜ், திருமதி எல். ஏ. பித்தவாடியன், திரு. எச். சி. கோதாரி, வி. எஸ். எல். நாதன், திருமதி எஸ். செல்லமணி.


---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2/140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா

# உலகச் சைவ உணவாளர் மாநாடு




பம்பாய் மாநில ஆளுநர், திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள்
மாநாட்டுத் துவக்கவுரை ஆற்றுதல்.



'மரக்கறிப் பொருட்காட்சி'யை மைசூர் மாநில ஆளுநர்,
திரு. செயசாமராச உடையார் அவர்கள் திறந்துவைத்தல்.



திறப்புகழ் வெளியீடு நிகழ்ந்த மறைமலையடிகளார் விழாவில் (3-11-1957), அடிகளார் படமும், அப் படத்திறப்பு நிகழ்த்திய குன்றக்குடி அடிகளாரும்.



மறைமலை அடிகளார் நினைவு விழாவில்
டாக்டர், மா. இராசமாணிக்கனாரவர்கள் சொற்பொழிவாற்றுதல்.